
# தினபூமி

thinaboomi.com

பூமி: 23 சுற்று: 242 ஆடி 13

புதுச்சேரி, செவ்வாய், ஜூலை 29, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00

**தாய்லாந்து-கம்போடியா போர் நிறுத்தத்துக்கு ஒப்புதல்: மலேசிய பிரதமர் தகவல்**

.2-ம் பக்கம்

**வாக்காளர் பட்டியல் திருத்தம்: பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டம்**

...3-ம் பக்கம்

**உலகக்கோப்பை செஸ் தொடர்: 19 வயது இந்திய வீராங்கனை திவ்யா தேஷ்முக் சாம்பியன்**

...6-ம் பக்கம்






● சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்நாடு செவிலியர் மற்றும் மகப்பேறு செவிலியர் அவையத்தின் நூற்றாண்டு தொடக்க விழாவில் 2025-ம் ஆண்டுக்கான சிறந்த செவிலியர் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, நா.எழிலன், நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார், திட்ட இயக்குநர் அருண் தம்புராஜ், இயக்குநர் ஜெ.ராஜமூர்த்தி, ஆராய்ச்சி இயக்குநர் தேரணிராஜன், பதிவாளர் எஸ்.அனிகிரேஸ் கலைமதி, துணைத்தலைவர் அனி ராஜா மற்றும் செவிலியர்கள் உடனிருந்தனர்.

## பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேஷன் சிந்துார் மூலம்


# இந்தியா வரலாற்று சாதனை படைத்தது

*** எந்த அழுத்தத்திற்கும் நாங்கள் அடிபணியவில்லை**

*** பார்லி.யில் மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் விளக்கம்**

புதுடெல்லி, ஜூலை 29-

**பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேஷன் சிந்துார் நடவடிக்கை மூலம் இந்தியா வரலாற்றுச் சாதனை படைத்தது என்று பாராளுமன்ற மக்களவையில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார். மேலும், இந்த விவகாரத்தில் எந்த ஒரு அழுத்தத்திற்கும் இந்தியா அடிபணியவில்லை என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.**



### தாக்குதலில் 26 பேர் பலி...

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22-ம் தேதி பாகிஸ்தானை அடிப்படையாக கொண்டு செயல்படும் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி சுற்றுலா பயணிகள் 26 பேர் பலியானார்கள். இதற்கு பதிலடியாக, இரு வாரங்களுக்கு பின்னர் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மீது இந்திய ராணுவம், பயங்கரவாத இலக்குகளை குறிவைத்து தாக்குதலை நடத்தியது. 9 பயங்கரவாத உட்கட்டமைப்புகளை இலக்காக கொண்டு இந்திய ஆயுத படைகள் சார்பில் ஆபரேஷன் சிந்துார் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### போர் பதற்ற சூழல்...

இந்த சம்பவத்திற்கு பின்பு, இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் பதற்ற சூழல் உருவானது. 4 நாட்களுக்கு பின்னர் இரு நாடுகளும் போர் நிறுத்த முடிவுக்கு வந்தன. பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்துவது இந்தியாவின் நோக்கமல்ல என மத்திய அரசு கூறியது. பயங்கரவாதிகளுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்பட்டது என தெரிவித்தது.

ஆனால், அமெரிக்காவின் தலையீட்டாலேயே இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் நடைபெறாமல் முடிவுக்கு வந்தது என அந்நாட்டு ஜனாதிபதி டிரம்ப் கூறினார்.

இது சர்ச்சையை ஏற்படுத்தியது. எனினும், இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் ராணுவ மட்டத்திலான பேச்சுவார்த்தையின் முடிவாகவே போர் நிறுத்தம் ஏற்பட்டது என இந்தியா கூறியது.

3-ம் நாட்டின் தலையீடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் மத்திய அரசு கூறியது.

### எதிர்க்கட்சிகள் குரல்...

இந்நிலையில், டிரம்ப் செய்தியாளர்களிடம் சமீபத்தில் பேசும்போது, உண்மையில் வான்வெளியில் 5 ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்றார். நாங்கள் நிறைய போர்களை தடுத்து நிறுத்தியிருக்கிறோம்.

ஆனால், இரு அணு ஆயுத நாடுகளான இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயான போர் தீவிர கவனத்தில் கொள்ள கூடியது என்றார். அவர் தொடர்ந்து இது போன்று கூறி வருவதற்கு பதிலளிக்கும்படி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குரல் உயர்த்தின.

### அமெரிக்க அதிபர்....

இந்நிலையில், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கடந்த 22-ம் தேதி கூறும்போது, இந்தியா, பாகிஸ்தான் இடையேயான போரானது அணு ஆயுத போரில் சென்று முடிய இருந்தது. அதனை நான் தடுத்து நிறுத்தினேன் என மீண்டும் நேற்று முன்தினம் கூறினார். இந்நிலையில், காங்கிரஸ் பொது செயலாளர் (பொறுப்பு) ஜெயராம் ரமேஷ் மறுநாள் கூறும்போது, பாராளுமன்றத்தில், பஹல்காம்-சிந்துார் பற்றிய விவாதத்திற்கான உறுதியான தேதிகளை வழங்க பிரதமர் மோடி அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது.

### மத்தியஸ்தம் கோரவில்லை...

இந்த சூழலில், அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் இதில் வெள்ளி விழா கண்டிருக்கிறார். அவர், கடந்த 73 நாட்களில், 25-வது முறையாக

(கடைசி பக்கம் பார்க்க)

## 22 பேருக்கு விருது வழங்கி கவுரவிப்பு:

# செவிலியர்களுக்கு தமிழக அரசு எப்போதும் பக்க பலமாக நிற்கும்

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு**

சென்னை, ஜூலை 29-

**செவிலியர்களுக்கு அரசு எப்போதும் பக்க பலமாக நிற்கும் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தமிழ்நாடு செவிலியர் மற்றும் மகப்பேறு செவிலியர் அவையத்தின் நூற்றாண்டு தொடக்க விழாவில், 22 செவிலியர்களுக்கு 2025-ம் ஆண்டுக்கான சிறந்த செவிலியர் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை வழங்கினார். மேலும் தமிழ்நாடு செவிலியர் மற்றும் மகப்பேறு செவிலியர் அவையத்தின் நூற்றாண்டு தொடக்க விழா இலட்சினை (*Logo*) மற்றும் நூற்றாண்டு விழா நிகழ்வுகளின் காலண்டர் தொகுப்பினை வெளியிட்டார்.

இதன் பின்னர் அவர் பேசியதாவது:

தமிழ்நாடு செவிலியர் மற்றும் மகப்பேறு செவிலியர் அவையம் 100 ஆண்டுகளை கடந்து இருக்கின்றது. அரசியல் சார்பற்ற, ஒரு கவுன்சிலை ஓராண்டு நடத்துவதே சிரமம். ஆனால், நீங்கள் நூறு ஆண்டுகளை கடந்து இருக்கிறீர்கள். பல நோய்கள் பரவி தமிழ்நாட்டை உலுக்கிய நிலையில் அதையெல்லாம் முன்களப் பணியாளர்களாக நின்று தடுத்தது செவிலியர் சமூகத்தை சேர்ந்த நீங்கள் தான்.

குறிப்பாக கொரோனா காலத்தில் நீங்கள் ஆற்றிய பணியை எந்த காலத்திலும் யாராலும், மறுக்க முடியாது, மறக்க முடியாது. நம்முடைய திராவிடல் மாடல் அரசு என்றைக்கும் செவிலியர்களுக்கு பக்க பலமாக நிற்கும். இன்றைக்கு நூற்றாண்டு காண்கின்ற இந்த செவிலியர் கவுன்சில் மேலும் பல ஆண்டுகள் செயல்பட்டு, மக்கள் பணியாற்றிட வேண்டும், தமிழ்நாட்டின் சுகாதாரத்தை பேணிப் பாதுகாத்திட வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

## மாநிலங்களவை புதிய உறுப்பினர்களாக

# இன்பதுரை, தனபால் பதவியேற்பு

புதுடெல்லி, ஜூலை 29-

**மாநிலங்களவை உறுப்பினர்களாக அ.தி.மு.க.வின் இன்பதுரை, தனபால் ஆகியோர் பதவியேற்பு ஏற்றுக்கொண்டனர்.**





மாநிலங்களவை உறுப்பினர்களாக அ.தி.மு.க.வின் இன்பதுரை, தனபால் ஆகியோர் நேற்று காலை 11 மணிக்கு மாநிலங்களவையில் பதவியேற்பு ஏற்றுக்கொண்டனர். அவர்களுக்கு மாநிலங்களவை துணைத்தலைவர் ஹரிவன்ஷ் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

ஏற்கெனவே, தி.மு.க. சார்பில் பி.வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை எம்பிக்களாக பதவியேற்ற நிலையில் நேற்று அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் பதவியேற்றனர். ஏற்கெனவே தம்பிதுரை, சி.வி.சண்முகம், சந்திரசேகரன்,தர்மர் (தர்மர் இப்போது ஓபிஎஸ் அணியில் தனியாக செயல்படுகிறார்)ஆகியோர் மாநிலங்களவை உறுப்பினர்களாக உள்ளனர். மாநிலங்களவையில் அ.தி.மு.க. உறுப்பினர்களின் எண்ணிக்கை 4-ல் இருந்து 6 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் இருந்து மாநிலங்களவைக்குத் தேர்வான வைகோ, பி.வில்சன், சண்முகம், எம்.எம்.அப்துல்லா, அன்புமணி மற்றும் சந்திரசேகரன் ஆகியோரது பதவிக்காலம் ஜூலை 24-ம் தேதியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து, 6 இடங்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. தி.மு.க., அ.தி.மு.க., ம.நீ.ம.வைச் சேர்ந்த 6 வேட்பாளர்களின் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டனர்.

## ஆதார், வாக்காளர் அட்டையை ஆவணமாக ஏற்றுக்கொள்ள

# தேர்தல் ஆணையத்திற்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடில்லி, ஜூலை 29-

**பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்கு, ஆதார், வாக்காளர் அடையாள அட்டையை ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என தேர்தல் கமிஷனுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.**

பீகாரில் நடந்து வரும் வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு எதிராக சுப்ரீம்கோர்ட்டில் தொடரப்பட்டுள்ள வழக்கு நேற்று (ஜூலை 28) நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன், விசாரணைக்கு வந்தது.

அப்போது, பீகாரில் நடந்து வரும் வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் ஆதார் மற்றும் வாக்காளர் அடையாள அட்டையை செல்லுபடியாகும் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ள தயங்குவது குறித்து, இந்திய தேர்தல் கமிஷனிடம் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் சரமாரி கேள்வி எழுப்பி உள்ளனர்.

தொடர்ந்து நீதிபதிகள் கூறியதாவது:-

எந்த ஆவணத்தையும் போலியாக உருவாக்க முடியும். வாக்காளர் பட்டியல் திருத்தத்தில், ஆதார், வாக்காளர் அடையாள அட்டையை ஆவணமாக கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும். வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் போது, ஆதார் மற்றும் வாக்காளர் அடையாள அட்டையை நிராகரிக்க கூடாது. ஆவணங்களில் எதுவும் பிரச்னை இருந்தால் தனிநபருக்கு நோட்டீஸ் அனுப்பி விளக்கம் கேட்கலாம். ஆதார் மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகள் ஏன் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை தேர்தல் கமிஷன் தெளிவுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## தாமாக முன்வந்து வழக்கு விசாரணை:

# தெருநாய்கள் பிரச்சினை மிக ஆபத்தானது: சுப்ரீம் கோர்ட்

புதுடெல்லி, ஜூலை 29-

**தெருநாய்கள் பிரச்சினை மிகவும் ஆபத்தானது என்று சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.**



நாய் கடியால் ரேபிஸ் நோய் பாதிப்பு ஏற்படும் சம்பவங்கள் தொடர்பாக ஊடங்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில் சுப்ரீம் கோர்ட் நேற்று தாமாக முன்வந்து வழக்கு விசாரணை நடத்தியது. இந்த வழக்கு நீதிபதி பர்திவாலா, நீதிபதி மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், "ஒவ்வொரு நாளும், டெல்லியிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான நாய்க்கடி சம்பவங்கள் பதிவாகி வருகின்றன, இது ரேபிஸ் நோய் பாதிப்புக்கு வழிவகுக்கிறது. குழந்தைகளும், முதியவர்களும் இந்த கொடூரமான நோய்க்கு இரையாகி வருகின்றனர். இந்த விவகாரம் மிகவும் அச்சுறுத்தக்கூடியது என்றும் மிகவும் ஆபத்தானது.

இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்க சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி அமர்வு முன்பு, இந்த வழக்கு தொடர்பான விவரங்கள் மற்றும் செய்தி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்" என்று நீதிபதிகள் தெரிவித்தனர். சுப்ரீம் கோர்ட்டின் இந்த நடவடிக்கை காங்கிரஸ் எம்.பி. கார்த்தி சிதம்பரம் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

# 3 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

ஜம்மு, ஜூலை 29-

**பாகிஸ்தானை சேர்ந்த 3 பயங்கரவாதிகளை பாதுகாப்பு படை சுற்றிவளைத்து என்கவுண்டர் செய்ததாக தகவல் வெளியாகி உள்ளது.**


ஜம்மு ஸ்ரீநகர் பகுதியில் பயங்கரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக இந்திய ராணுவத்துக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில், சம்பந்தப்பட்ட பகுதியில் ட்ரோன்கள் மூலம் ராணுவத்தினர் தேடுதல் வேட்டை நடத்தினர். இதில், மூன்று பயங்கரவாதிகள் அந்தப் பகுதியில் இருந்தது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து, அந்தப் பகுதிக்கு விரைந்த இந்திய ராணுவத்தினரை பார்த்து பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர்.

இதில், இந்திய ராணுவத்தினருக்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடைபெற்றது. இதில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆபரேஷன் மகாதேவ் நடவடிக்கையின் ஒரு பகுதியாக என் கவுண்டர் என பாதுகாப்பு படை தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய ராணுவத்தினர் நடத்திய விசாரணையில், உயிரிழந்த பயங்கரவாதிகள் கடந்த ஏப்ரல் 22-ஆம் தேதி ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் துப்பாக்கி சூடு தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளாக இருக்கலாம் என்றும் இது குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக பாதுகாப்பு படை தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பாகிஸ்தான் ராணுவத்தால் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் என்பது கூறப்படுகிறது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -572.07 | -156.10 |
| பாயின்ட் 80,891.02 | பாயின்ட் 24,680.90 |




**தங்கம்**
1 சவரன் ₹73,280
1 கிராம் ₹9,160



**வெள்ளி**
1 கிலோ ₹126,000
1 கிராம் ₹126.00

**டாலர்** ₹86.69

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# தாய்லாந்து-கம்போடியா போர் நிறுத்தத்துக்கு ஒப்புதல்

## மலேசிய பிரதமர் இப்ராஹிம் தகவல்

**கோலாலம்பூர், ஜூலை 29-**

தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகள் நிபந்தனையற்ற உடனடி போர்நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்



தாய்லாந்தின் தற்காலிகப் பிரதமர் பும்தம் வெச்சயாசாய் மற்றும் கம்போடியாவின் பிரதமர் ஹன் மானெட் ஆகியோர் நேற்று மலேசியாவின் புத்ரஜெயாவில் உள்ள பிரதமர் அன்வரின் அதிகாரப்பூர்வ இல்லத்தில் போர்நிறுத்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். கம்போடியா மற்றும் தாய்லாந்து தலைவர்களுடன் இணைந்து பேசிய மலேசிய பிரதமர் அன்வர், "கம்போடியா மற்றும் தாய்லாந்து இடையே மிகவும் நேர்மறையான முன்னேற்றத்தை காணும் வகையில் நல்ல முடிவுகளை நாங்கள் கண்டிருக்கிறோம்." என்று அறிவித்தார்.

அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் தலைவர்களுடனும் இணைந்து மோதலுக்கு அமைதியான தீர்வைக் காண மலேசியா நெருங்கிய தொடர்பில் உள்ளது என அன்வர் கூறினார். நேற்று நள்ளிரவு அமலுக்கு வரும் வகையில் கம்போடியாவும் தாய்லாந்தும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அன்வர் தெரிவித்தார். இது இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றத்தைத் தணிப்பதற்கும், அமைதி மற்றும் பாதுகாப்பை மீட்டெடுப்பதற்குமான நடவடிக்கையில் முதல் படியாகும் என்றும் அன்வர் கூறினார். கடந்த வியாழக்கிழமை எல்லையில் ஏற்பட்ட கண்ணிவெடி தாக்குதலில் 5 தாய்லாந்து வீரர்கள் காயமடைந்ததைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே மோதல் வெடித்தது. மோதல்களைத் தொடங்கியதற்காக இரு தரப்பினரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். 5-வது நாளாக நீடிக்கும் இந்த போரில் இருதரப்பிலும் இது வரை 35 பேர் உயிரிழந்தனர். இரு தரப்பிலும் 2,60,000-க்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்த்துள்ளனர். இரு நாடுகளும் தங்கள் தூதர்களை திரும்ப பெற்றதுடன், இரு நாடுகளுக்கு இடையிலான அனைத்து எல்லைகளும் மூடப்பட்டுள்ளன.

# பாக்.கில் பள்ளத்தில் கவிழ்ந்த பஸ்: பயணிகள் 10 பேர் பலி

**இஸ்லாமாபாத், ஜூலை 29-**

பாகிஸதானில் பஸ்சின் டியர் வெடித்ததில் அங்கிருந்த பள்ளத்தில் கவிழ்ந்ததில் 10 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் நகரில் இருந்து பஞ்சாப் மாகாணத்தின் லாகூர் நோக்கி பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. பாலகசார் என்ற இடத்துக்கு அருகே சென்றபோது அந்த பஸ்சின் முன் பக்க டயர் ஒன்று வெடித்தது. இதனால் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் தாறுமாறாக ஓடியது. பின்னர் சாலையோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தில் 10 பயணிகள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த 30 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பள்ளத்தில் பஸ் கவிழ்ந்த விபத்தில் சிக்கி 10 பேர் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ரஷ்யா - வடகொரியா இடையே நேரடி விமான சேவை துவக்கம்

**மாஸ்கோ, ஜூலை 29-**

ரஷ்யா-வடகொரியா இடையே நேரடி விமான சேவை தொடங்கப்பட்டுள்ளது.

உக்ரைன்-ரஷ்யா இடையே 2022-ம் ஆண்டு போர் தொடங்கியது. இந்த போரில் உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகள் செயல்படுகின்றன. அதேபோல் ரஷ்யாவுக்கு அதன் நட்பு நாடான வடகொரியா ராணுவ உதவியை வழங்கி வருகிறது. எனவே இரு நாடுகள் இடையேயான உறவில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது.

இதற்கிடையே கடந்த மாதம் ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இருந்து வடகொரியா தலைநகர் பியாங்க்யாங் இடையே ரெயில் சேவை தொடங்கப்பட்டது. ஆனால் இதன் பயண நேரம் சுமார் 10 நாட்கள் ஆகும்.

இதனால் நேரடி விமான சேவை தொடங்க இரு நாடுகளும் நடவடிக்கை எடுத்து வந்தன. அந்தவகையில் தற்போது மாஸ்கோ-பியாங்க்யாங் இடையே நேரடி விமான சேவை நேற்று தொடங்கியது. இந்த விமானம் வாரத்துக்கு 2 முறை இயங்கும் என ரஷ்ய விமான போக்குவரத்து நிறுவனமான ரோசாவியாட்சியா தெரிவித்துள்ளது.

# நாட்டின் முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க பாராளுமன்றத்திற்கு பிரதமர் வருவதில்லை

## தி.மு.க. எம்.பி. திருச்சி சிவா குற்றச்சாட்டு

**டெல்லி, ஜூலை 29-**

நாட்டில் உள்ள முக்கிய பிரச்னைகள் குறித்து பாராளுமன்றத்தில் விவாதித்து முடிவெடுக்க வேண்டும் என திமுக எம்.பி. திருச்சி சிவா கூறியுள்ளார்.

பிகாரில் நிகழாண்டு இறுதியில் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மாநில வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் செய்யும் பணியை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. இதில் சுமார் 60 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. உயிரிழந்தவர்கள், புலம் பெயர்ந்தவர்களின் பெயரைத்தான் நீக்கியுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறுகிறது. ஆனால் வாக்காளர்களை நீக்கி வெற்றி பெற பா.ஜ.க. முயல்வதாக எதிர்கட்சிகள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. பாராளுமன்றத்தில் இது பற்றி விவாதிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இந்நிலையில் திமுக எம்.பி. திருச்சி சிவா பாராளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களுடன் பேசுகையில்,

பிகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பற்றி பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று இந்தியா கூட்டணி கட்சிகள் கோருகின்றன. அதாவது இரண்டு விஷயங்கள் பற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். ஆபரேஷன் சிந்தூர் பற்றிய விவாதம் தொடங்கியுள்ளது. அதேபோல பிகாரில் வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது ஒரு எரிந்துகொண்டிருக்கும் பிரச்னை. இது ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல். ஒவ்வொரு குடிமகனுக்கும் வாக்குரிமை என்பது மிகவும் அடிப்படையான உரிமை. அதன் மூலமாகவே அரசைத் தேர்ந்தெடுக்கிறார்கள். வாக்குரிமையே இல்லை என்றால் குடிமகனாக இருப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

வாக்குரிமையை நீக்க தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் இல்லை. இது பற்றி அரசு கண்டிப்பாக விளக்கம் அளிக்க வேண்டும். விவாதிக்க வேண்டும். விவாதித்து நாம் முடிவெடுப்போம். பிரதமர் பாராளுமன்றத்திற்கு வருவதில்லை. மத்திய உள்துறை அமைச்சர் மிகவும் அரிதாகவே பாராளுமன்றத்திற்கு வருவார். பொறுப்புமிக்கவர்கள் சில குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே வருகிறார்கள். பாராளுமன்றம் நாளுக்கு நாள் வலுவிழந்து வருகிறது. நாங்கள் ஜனநாயகத்தை மீட்டெடுக்க விரும்புகிறோம். அரசுக்கு பொறுப்பு இருக்கிறது. அவர்கள் பதிலளிக்க வேண்டும்" என்று பேசினார்.

# பிரதமர் விழாவில் திருமாவளவன் பங்கேற்பு: வன்னியரசு விளக்கம்

**சென்னை, ஜூலை 29-**

பிரதமர் மோடி பங்கேற்ற கூட்டத்தில் திருமாவளவன் பங்கேற்றது குறித்து வன்னியரசு விளக்கம் அளித்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி துணை பொதுச்செயலாளர் வன்னியரசு எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், சிதம்பரம் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட ஜெயங்கொண்டம் சோழபுரத்தில் முதலாம் ராஜேந்திர சோழனின் ஆயிரமாவது பிறந்த நாள் விழாவில் இந்திய ஒன்றிய தலைமை அமைச்சர் என்ற முறையில் நரேந்திர மோடி பங்கேற்றார். பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் எமது விடுதலைச்சிறுத்தைகள் பேரியக்கத்தின் தலைவர் தொல். திருமாவளவன் பங்கேற்றார். இதில் எந்த அரசியலும் இல்லை.

தொகுதியில் நடக்கும் அரசு விழாக்களில் பங்கேற்பது மரபாகவும் நாகரீக அரசியலாகவுமே விடுதலைச்சிறுத்தைகள் பார்க்கிறோம். ஆனால், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி "பிரதமர் மேடையில் திருமாவளவன் பங்கேற்றது அற்புதமான திருப்புமுனை" என்று சொல்லியிருக்கிறார். இதில் எந்த திருப்புமுனையும் இல்லை. விடுதலைச் சிறுத்தைகள் எப்போதும் சனாதன எதிர்ப்பில் சமரசம் செய்யவே மாட்டோம். சனாதனத்தை நிறுவ முயலும் பாஜகவுடன் அரசியல் ரீதியான எந்த உறவும் வைக்க மாட்டோம் என எமது தலைவர் பிரகடனப்படுத்திய பிறகும் ஒருவித குழப்பம் மற்றும் நம்பிக்கையற்ற சூழலிலே அதிமுக இருப்பதை ராஜேந்திர பாலாஜி உணர்த்துகிறார்.

எந்த மேடையில் நின்றாலும் சிறுத்தை சிறுத்தையாகவே களமாடுவோம். 2026 ல் ஒரு தொகுதியில் கூட வெல்ல முடியாத அளவுக்கு அதிமுக- பாஜக கூட்டணியை மக்கள் தோற்கடிப்பார்கள் என்பது உறுதி. தமிழ்நாட்டுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் துரோகம் செய்துவரும் அதிமுக- பாஜகவை ஒருபோதும் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று கூறியுள்ளார்.

# இந்தியா - அமெரிக்கா இடையே விரைவில் 'ட்ரோன்' ஒப்பந்தம்

**புதுடில்லி, ஜூலை 29-**

இந்தியா- அமெரிக்கா இடையே போர் ட்ரோன் ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாக உள்ளது. இந்த ஒப்பந்தத்திற்கு பிறகு, 2026ம் ஆண்டு முதல் காலாண்டில் போர் ட்ரோன்கள் இந்தியா வந்தடையும்.

பஹல்காமில் பயங்கரவாத தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளுக்கு பாடம் புகட்ட, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடங்கப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு பிறகு ஆயுதம் கொள்முதலில் பாதுகாப்பு துறை கவனம் செலுத்தி வருகிறது. வானில் நீண்ட தூரம் சென்று தாக்கும் ட்ரோன்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் வாங்க மத்திய அரசு ஆர்வம் காட்டி வருகிறது.

தற்போது, அவசரகால கொள்முதல் திட்டத்தின் கீழ், பாதுகாப்பு அமைச்சகம் அமெரிக்காவில் இருந்து இந்திய விமானப்படைக்கு போர் ட்ரோன்களை இறக்குமதி செய்ய பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந்திய விமானப்படையுடனான ஆரம்ப ஒப்பந்தம் 35 மில்லியன் டாலர் ஆகும். இது அவசரகால கொள்முதல் திட்டத்தின் கீழ் விரைவில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட இருக்கிறது. இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகிய பிறகு, 2026ம் ஆண்டு முதல் காலாண்டில் போர் ட்ரோன்கள் இந்தியாவை வந்தடையும். கடந்த ஆண்டு ரஷ்யாவிற்கு எதிரான தாக்குதலில் உக்ரைன் பயன்படுத்திய, ''ஷீல்ட் ஆலின் விபேட்'' போர் ட்ரோன்கள், ஜிபிஎஸ் அல்லாத, நெட்வொர்க்-ஜாம் செய்யப்பட்ட வான்வெளிப் பகுதிகளிலும் கூட இயங்க முடியும்.

இது நவீன போரில் ஒரு முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்த ட்ரோன்கள் தற்போது இந்தியாவின் உள்நாட்டு ட்ரோன்களால் ஒப்பிட முடியாத வகையில், துல்லியமாக தாக்கும் திறன் கொண்டது. இந்த போர் ட்ரோன் அதிக தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ளதால் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.


# ஜெர்மனியில் ரயில் தடம்புரண்டு விபத்து - 3 பேர் உயிரிழப்பு

**பெர்லின், ஜூலை 29-**

ஜெர்மனியின் பேடன்-வூர்ட்டம்பேர்க் மாகாணத்தின் சிங்மெரிஜென் நகரில் இருந்து உல்ம் நகருக்கு நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு எக்ஸ்பிரஸ் ரயில் சென்றுகொண்டிருந்தது. அந்த ரெயிலில் 100க்கும் மேற்பட்டோர் பயணித்தனர். பிபிரிட்ச் மாவட்டத்தில் சென்றுகொண்டிருந்தபோது ரெயிலின் 2 பெட்டிகள் தடம்புரண்டன.

இந்த விபத்தில் ரெயிலில் பயணம் செய்த 3 பயணிகள் உயிரிழந்தனர். மேலும், 41 பேர் காயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், இந்த ரயில் விபத்து தொடர்பாக ரயில்வே அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**29-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எல்லா வளமும் பெறும் இனிய நாள். வியாபாரப் பயணங்களால் இலாபம் ஏற்படும். அழகுப் பெண்களின் சிநேகமும், அழகான தனி வீடு அமையும். சுப காரியங்கள் நிறைவேறும்.

**ரிஷபம்:-** கௌரவக் குறைவு ஏற்படுத்தும் செயல்கள் தவிருங்கள். விபத்து ஏற்படாதிருக்க பயணத்தின் போது எச்சரிக்கை தேவை. மனஅமைதி பெற தியானம் செய்க.

**மிதுனம்:-** வியாபாரத்தில் ஏற்படும் இடைஞ்சல்களை தவிர்க்கப் பணியாளர்கள் ஒத்துழைப்புத் தேவை. தாயின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

**கடகம்:-** மனம் கோணாதபடி பணிவிடை செய்யும் மனைவியின் உதவி கிடைக்கும். பல வழிகளில் வருமானம் பெருகி மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும். சகோதர நன்மை உண்டு.

**சிம்மம்:-** நல்ல வருமானம் வருவது போல் தோற்றமளிக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய முதலீடுகளை தவிர்கவும். பதவி அல்லது இட மாற்றங்கள் ஏற்படலாம்.

**கன்னி:-** எதிர்பார்த்த இடங்களில் இருந்து தனவரவு உண்டாகும். புத்தாடை அணிகலன்கள், வாசனைத் திரவியங்களும் சேரும். வாய்க்கு ருசியாக நல் உணவுக்கு குறைவிருக்காது.

**துலாம்:-** பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். வீண் வம்புக்கு செல்லாதிருப்பது நல்லது. மாற்றங்கள் நிகழும். குறிக்கோளின்றி மனம் போன போக்கில் அலைய நேரும்.

**விருச்சிகம்:-** தனலாபமும், எல்லா வகையிலும் நன்மையும் ஏற்படும். கல்வியில் வெற்றி கிடைக்கும். கௌரவம், மதிப்பு மரியாதை கூடும். பெண்களால் உதவியும் பிரிந்திருந்தவர் கூடியும் மகிழ்வர்.

**தனுசு:-** நினைத்த காரியங்கள் நடக்கும். வாழ்க்கையில் முன்னேற்றங்கள், புதிய திருப்பங்கள் ஏற்படும். பிறருக்குக் கட்டளை இடும் படியான அதிகாரமுள்ள பதவிகள் கிடைக்கும்.

**மகரம்:-** தெய்வபக்தி மேலிட தெய்வீக காரியங்கள் ஈடேறும். எல்லாவற்றிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**கும்பம்:-** எதிலும் நேர்மையாக நடக்க வேண்டிய நாள். தவறு செய்தால் தண்டிக்க படுவீர்கள். உயர்வு வரும்போது பணிவு வேண்டும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் அனுகூலம் ஏற்படும் .

**மீனம்:-** பணவரவு உண்டு. தொழில் வளம் பெருகும். எதையும் துணிச்சலுடன் எதிர் கொள்வீர்கள். வரும் வாடிக்கையாளர்களின் மனம் அறிந்து செயல்பட்டால் வியாபாரம் பெருகும்.

# வெளிநாட்டு சிறையில் 10 ஆயிரம் இந்தியர்கள்: பார்லி.யில் மத்திய அமைச்சர் தகவல்

**புதுடெல்லி, ஜூலை 29-**

வெளிநாட்டு சிறையில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் அடைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் கூறினார்.

பாராளுமன்ற மக்களவையில் நடந்த கேள்வி நேரத்தின்போது மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் எழுத்து மூலம் அளித்த பதிலில் கூறியுள்ளதாவது:-

உலகம் முழுவதும் பல்வேறு நாட்டில் உள்ள சிறைகளில் 10,574 இந்தியர்கள் உள்ளனர். அதிகபட்சமாக ஐக்கிய அரபு அமீரக நாட்டில் 2,773 இந்தியர்கள் பல்வேறு குற்றச்சாட்டில் சிக்கி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சவுதி அரேபியாவில் 2,379 பேர், நேபாளத்தில் 1,357 பேர், கத்தாரில் 795 பேர், மலேசியாவில் 380 பேர், குவைத்தில் 342 பேர், பிரிட்டனில் 323 பேர், பஹ்ரைனில் 261 பேர் மற்றும் பாகிஸ்தானில் 246 இந்தியர்களும் சிறைகளில் உள்ளனர்.

மேலும், 43 இந்தியர்கள் பல்வேறு நாடுகளில் மரண தண்டனை பெற்று சிறையில் உள்ளனர். இதில் அதிகபட்சமாக ஐக்கிய அரபு அமீரக நாட்டில் 21 இந்தியர்கள் உள்ளனர். அவர்கள் பொது மன்னிப்பு கேட்பதற்கான உதவிகளை இந்திய தூதரகங்கள் மூலம் செய்து வருகிறோம் என தெரிவித்தார்.

# காசாவில் தாக்குதல் நிறுத்த நேரம்: இஸ்ரேல் அறிவிப்பு

## தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை:

**காசா, ஜூலை 29-**

காசாவில் தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை 10 மணி நேரம் போர் நிறுத்தத்தை இஸ்ரேல் அறிவித்துள்ளது.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். இந்தநிலையில், இஸ்ரேல் – பாலஸ்தீனம் இடையேயான போர் ஒன்றரை ஆண்டுகளைக் கடந்து நடந்து வருகிறது. காசாவில் மக்கள் உணவு, மருத்துவம் இன்றி தவித்து வரும் நிலையில் இஸ்ரேல் தொடர்ந்து காசா மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், உணவு கிடைக்காமலும், ஊட்டச் சத்து குறைபாட்டாலும் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை காசாவில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மேலும் காசாவில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் உணவுக்காக காத்திருக்கும் மக்கள் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேலின் தாக்குதலால் உயிரிழந்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 59 ஆயிரத்தைக் கடந்துள்ளது. மேலும் பட்டினியால் உயிரிழந்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 100-ஐக் கடந்துள்ளது. இதனால், போரை உடனடியாக முடிவிற்கு கொண்டுவரக்கோரி சர்வதேச அளவில் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது. இதையடுத்து காசா சிட்டி, டெய்ர் அல்- பலாஹ் மற்றும் முவாசி ஆகிய மக்கள் அடர்த்தி நிறைந்த மூன்று பகுதிகளில் தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை 10 மணி நேரம் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

உணவு, மருந்து மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை தினமும் காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை இந்த வழித்தடங்கள் வழியாக எடுத்துச் செல்லலாம் மற்ற பகுதிகளில், வழக்கம் போல் தாக்குதல்கள் தொடரும். மறு அறிவிப்பு வரும் வரை இது அமலில் இருக்கும். காசாவில் மாவு, சர்க்கரை, மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் அடங்கிய பைகளை வான்வழியாக வீசியதாகவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது. மேலும் ஜோர்டனும் ஐக்கிய அரபு அமீரகமும், வான்வழியில் உதவிப் பொருட்களை போடுவதற்கு ஏதுவாக இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

# காங்கோவில் தேவாலயம் மீது திடீர் தாக்குதல்: பலி 34 ஆனது

**கின்ஸாசா, ஜூலை 29-**

காங்கோவில் தேவாலயம் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியதில் இது வரை 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்பிரிக்க நாடான காங்கோவில் கோமாண்டா நகரில் கிறிஸ்தவ தேவாலயம் உள்ளது. இந்த தேவாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனை நடந்துகொண்டிருந்தது. அப்போது துப்பாக்கி மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களுடன் தேவாலயத்துக்குள் புகுந்த கும்பல் அங்கிருந்தவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டது. உயிருக்கு பயந்து பிரார்த்தனையில் ஈடுபட்டவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்.

மேலும் அந்த கும்பல் அங்கிருந்த வீடுகள் மற்றும் கடைகளுக்கும் தீ வைத்தது. அதில் வீடுகள், கடைகள் எரிந்து சேதமானது. இந்த தாக்குதலில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளது. முன்னதாக தேவாலயம் அருகில் உள்ள மக்சோஸ்கனி கிராமத்தில் இந்த கும்பல் நடத்திய தாக்குதலில் 5 பேர் இறந்தனர். கோமாண்டா நகரில் இருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கோட்டையில் இருந்து வந்த இக் கும்பல் தாக்குதல் நடத்தி உள்ளனர். அரசுக்கு ஆதரவான கிளர்ச்சியாளர்கள் இந்த தாக்குதலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. அவ்வப்போது இவர்கள் பொதுமக்களை குறி வைத்து தாக்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் நிலநடுக்கம்

**இஸ்லாமாபாத், ஜூலை 29-**

பாகிஸ்தானில் நேற்று மதியம் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது.

அதிகாலை 2.06 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 33.46 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 71.19 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

மரம் மனிதனின் உரம்

# தாய்லாந்து: துப்பாக்கி சூட்டில் 6 பேர் பலி

**பாங்காக், ஜூலை 29-**

தாய்லாந்தில் ஏற்பட்ட துப்பாக்கி சூட்டில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆசியாவில் அமைந்துள்ள தாய்லாந்து உலகப்புகழ்பெற்ற சுற்றுலா தலங்களை கொண்டுள்ளது. இந்நாட்டின் தலைநகர் பாங்காக்கில் உள்ள பங்சு மாவட்டம் சடுசங் பகுதியில் காய்கறி சந்தை உள்ளது.

இந்நிலையில், இந்த சந்தைப்பகுதிக்கு நேற்று துப்பாக்கியுடன் வந்த நபர் அங்கு பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்த காவலளர்களை சரமாரியாக சுட்டார். மேலும், அங்கிருந்த ஒரு பெண்ணையும் சுட்டார். இந்த சம்பவத்தில் காவலர்கள் 4 பேர், ஒரு பெண் என 5 பேர் உயிரிழந்தனர். இதன் பின்னர், துப்பாக்கி சூடு நடத்திய நபர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டார். இதனால், இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் மொத்தம் 6 பேர் உயிரிழந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தற்கொலை செய்துகொண்ட நபர் யார்? துப்பாக்கி சூட்டிற்கான காரணம் என்ன? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே, தாய்லாந்திற்கும் கம்போடியாவிற்கும் இடையே எல்லை விவகாரத்தில் கடந்த சில நாட்களாக மோதல் நீடித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

எழுச்சிப்பயணம் மக்கள் ஆதரவோடு வெற்றிகர பயணம்:

# 10 சதவீத வாக்குறுதிகளை கூட தி.மு.க. அரசு நிறைவேற்றவில்லை

## எடப்பாடி பழனிசாமி அறிக்கை



**சென்னை, ஜூலை 29-**

தி.மு.க. கூறிய 525 தேர்தல் வாக்குறுதிகளில் 10 சதவீதத்தை கூட நிறைவேற்றவில்லை என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது :-

"மக்களைக் காப்போம் - தமிழகத்தை மீட்போம்" என்கிற எனது எழுச்சிப் பயணம் உங்களின் பேராதரவோடு வெற்றிகரமாக சென்றுகொண்டிருக்கிறது. எனது எழுச்சிப் பயணத்தை ஜூலை 7-ந்தேதி கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதியில் துவங்கி, ஜூலை 25-ந்தேதியில் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி வரை நிறைவு செய்திருக்கிறேன்.

10 மாவட்டங்களில், 46 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிகரமாக சுமார் 18.5 லட்சம் மக்களை நேரடியாக சந்தித்திருக்கிறேன். அவர்களைப் பார்த்து, அவர்களின் குறைகளைக் கேட்டு, அவர்களின் மனநிலையை அறிந்தேன். அவர்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்வேன். நான் சென்ற இடங்களில் எல்லாம் என்னை ஆர்வமுடன் சந்தித்த அனைவருமே, மக்கள் விரோத ஆட்சியில், அவர்கள் சந்தித்து வரும் வேதனைகளை எடுத்துரைத்தனர்.

தி.மு.க. கூறிய 525 தேர்தல் வாக்குறுதிகளில் 10 சதவீதத்தை கூட நிறைவேற்றவில்லை. ஆனால், 98 சதவீதத்தை நிறைவேற்றிவிட்டோம் என்று பச்சைப் பொய் சொல்லி முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயல்கிறது இந்த மக்கள் விரோத அரசு. தனிநபர் வருமானத்தில் தேசிய அளவில் தமிழ்நாடு இரண்டாமிடம் என்பது, அ.தி.மு.க. ஆட்சியின் தொடர்ச்சியே தவிர, ஸ்டாலின் அரசின் சாதனையல்ல. வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்! குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டுவோம். தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம். வானளாவிய வெற்றிபெற்ற எனது எழுச்சிப் பயணம் தொடரும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பஹல்காமில் பயங்கரவாதிகள் நுழைந்தது எப்படி? காங்கிரஸ்

**புதுடில்லி, ஜூலை 29-**

பஹல்காமில் பயங்கரவாதிகள் அத்துமீறி எப்படி நுழைந்தார்கள் என்பதை ராஜ்நாத் சிங் சொல்லவில்லை என்று பார்லி விவாதத்தில் காங்கிரஸ் எம்பி கவுரவ் கோகாய் பேசினார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், லோக்சபாவில் நேற்று ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்த விவாதத்தை துவக்கி வைத்து பேசினார். அப்போது பாகிஸ்தானில் 9 முக்கிய நிலைகளில் 100 க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தியா, பாகிஸ்தானுக்கு தகுந்த பதிலடி கொடுத்து விட்ட நிலையில், பாகிஸ்தான் கேட்டுக்கொண்டதை அடுத்து போர் முடிவுக்கு வந்தது என்று ராஜ்நாத்சிங் கூறினார்.

தொடர்ந்து காங்கிரஸ் எம்பி கவுரவ் கோகாய் பேசியதாவது: ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சர் நிறைய விளக்கம் அளித்தார். ஆனால் பயங்கரவாதிகள் பஹல்காமை எவ்வாறு அடைந்தார்கள் என்பதைச் சொல்லவில்லை. இது தகவல் போரின் யுகம். பாதுகாப்பில் தோல்வி மூலம் தார்மீகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஜம்மு-காஷ்மீர் லெப்டினன்ட் கவர்னர் மனோஜ் சின்ஹா பின்னால் ஒளிந்து கொள்ள கூடாது. மத்திய அரசு பொறுப்பேற்க வேண்டும்.

பஹல்காம் தாக்குதல் நடந்த நேரத்தில் தனது சவுதி அரேபியா பயணத்தை முடித்த பிறகு, பாதிக்கப்பட்ட பகுதிக்கு உடனடியாகச் செல்லாமல், பிரதமர் நரேந்திர மோடி, பீகாரில் அரசியல் தொடர்பாக உரையாற்றினார். பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்க காங்கிரஸ் தலைவர் ராகுல் மட்டுமே சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றார். இவ்வாறு கவுரவ் கோகாய் பேசினார்.

வாக்காளர் பட்டியல் திருத்தம்:

# பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டம்




**புதுடெல்லி, ஜூலை 29-**

பீகார் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21-ந்தேதி தொடங்கியது. இதில் பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி ஆகியவை பற்றி விவாதம் நடத்த வேண்டும் என்று பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தினமும் அமளியில் ஈடுபட்டு வந்தனர். இதனால் கடந்த வாரம் முழுவதும் அலுவல் எதையும் கவனிக்காமல் பாராளுமன்றம் முடங்கியது. இதையடுத்து இந்த விவகாரத்தில் மத்திய அரசுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் இடையே சமரசம் ஏற்பட்டது.

பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் ஆகிய பிரச்சனைகள் குறித்து பாராளுமன்றத்தில் நேற்று (திங்கட்கிழமை) முதல் விவாதத்தை தொடங்க இருப்பதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை எதிர்க்கட்சிகள் ஒப்புக்கொண்டன. அதன்படி மக்களவையில் நேற்றும், மாநிலங்களவையில் இன்றும் (செவ்வாய்க்கிழமை) விவாதம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இரு அவைகளிலும் தலா 16 மணி நேரம் விவாதம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நேரம் நீட்டிக்கப்படவும் வாய்ப்பு உள்ளது.

இதையடுத்து பாராளுமன்ற கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நேற்று காலை பாராளுமன்றத்துக்கு வந்தனர். காலை 10.30 மணியளவில் அவர்கள் பாராளுமன்றத்துக்கு வெளியே ஒன்று கூடினார்கள். அப்போது பீகார் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பாராளுமன்றத்துக்கு வெளியே திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பாராளுமன்ற வளாகத்தில் பரபரப்பு நிலவியது.

# புதுச்சேரியில் அனைத்து குடும்ப தலைவிகளுக்கும் மாதம் ரூ.1,000

## முதல்வர் ரங்கசாமி அறிவிப்பு

**புதுச்சேரி, ஜூலை 29-**

புதுச்சேரியில் அனைத்து குடும்ப தலைவிகளுக்கும் மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என முதல்வர் ரங்கசாமி அறிவித்துள்ளார்.

பெண்களின் முன்னேற்றத்திற்காக மத்திய மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் பெண்கள் சொந்தமாக முன்னேற நிதி உதவி திட்டங்களை வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் மகளிர் உரிமைத் தொகை திட்டம் கடந்த 2023 செப்டம்பர் முதல் 1 கோடியே 6 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெண்களுக்கு மாதம் ரூ.1,000 நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இதே போல பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் திட்டமானது புதுச்சேரியிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதுச்சேரி அரசு பெண்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் உதவித்தொகை வழங்கும் திட்டத்தை 2024-ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியது.

இந்தநிலையில், புதுச்சேரி தவளக்குப்பம் பகுதியில் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் இலவச மனை பட்டா வழங்கும் விழாவில் முதல்வர் ரங்கசாமி பங்கேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், புதுச்சேரியில் உள்ள அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் மாதம் ரூ.1,000 ரூபாய் உதவித் தொகை விரைவில் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

புதுச்சேரியில் தற்போது வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத் தலைவிகளுக்கு மட்டும் மாதம் ரூ.1000 வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் மாதம் ரூ.1000 வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப் படும் என்று தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டு புதுச்சேரி, தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் தான் முதல்வர் ரங்கசாமி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

காப்புரிமை விவகாரம்:

# இளையராஜா மனு தள்ளுபடி

**புதுடில்லி, ஜூலை 29-**

காப்புரிமை தொடர்பாக, சோனி நிறுவனம் தொடர்ந்த வழக்கை மும்பை ஐகோர்ட்டில் இருந்து, சென்னை ஐகோர்ட்டிற்கு மாற்றக்கோரிய இளையராஜாவின் மனு, சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டது. தங்களுக்கு உரிமை வழங்கப்பட்ட 228 ஆல்பம் பாடல்களை 3ம் நபர்களுக்கு பயன்படுத்த அனுமதி வழங்கியிருப்பதாக கூறி, சோனி நிறுவனம், இளையராஜா நிறுவனத்தின் மீது மும்பை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. இளையராஜாவின் நிறுவனம் அவ்வாறு செய்யாமல் இருக்கும் வகையில் தடை விதிக்கவும், இடைக்கால நிவாரணம் கோரியும் சோனி நிறுவனம் 2022ல் தொடர்ந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. இந்நிலையில், சோனி நிறுவனத்தின் வழக்கை சென்னை ஐகோர்ட்டிற்கு மாற்ற கோரி, இளையராஜா சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நேற்று (ஜூலை 28) சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் மற்றும் நீதிபதிகள் கே.வினோத் சந்திரன் மற்றும் என்.வி.அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, இளைய ராஜாவின் கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதிகள், மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# இணையத்தில் திரைப்படங்களை அனுமதியின்றி வெளியிட்டால் 3 ஆண்டுகள் சிறை தண்டனை

## மத்திய அமைச்சர் எல்.முருகன் எச்சரிக்கை

**புதுடெல்லி, ஜூலை 29-**

திரைப்படங்களை அனுமதியின்றி பதிவு செய்து இணையதளங்களிலோ, இதர தளங்களிலோ வெளியிட்டால், குறைந்தபட்சம் 3 மாத சிறைத்தண்டனை மற்றும் ரூ.3 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என மத்திய அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

புதிதாக வெளியாகும் திரைப்படங்கள், உடனுக்குடன் சில இணையதளங்களில் சட்டவிரோதமாக வெளியிடப்படுவதாக புகார்கள் எழுந்துள்ளன. இதற்கிடையே, நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் எல்.முருகன் கூறியதாவது:-

திரைப்படங்களை அனுமதியின்றி பதிவு செய்து வெளியிடுவதை திரைப்பட சட்டத்தின் 6ஏஏ மற்றும் 6ஏபி பிரிவுகள் தடை செய்கின்றன. சினிமா திருட்டுக்கு எதிரான சட்டப்பிரிவுகளை வலுப்படுத்துவதற்காக 2 ஆண்டுகளுக்கு முன்பு திரைப்பட சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அதன்படி, திரைப்படங்களை அனுமதியின்றி பதிவு செய்து இணையதளங்களிலோ, இதர தளங்களிலோ வெளியிட்டால், குறைந்தபட்சம் 3 மாத சிறைத்தண்டனை மற்றும் ரூ.3 லட்சம் அபராதம் விதிக்கப்படும். சிறைத்தண்டனையை 3 ஆண்டுகள் வரையும், அபராதத்தை தணிக்கை செய்யப்பட்ட மொத்த படத்தயாரிப்பு செலவில் 5 சதவீதம் வரையும் நீட்டிக்க முடியும்.

திரைப்பட சட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட 7(1பி)(ஐஐ) பிரிவு, திரைப்படங்களை திருட்டுத்தனமாக வெளியிடும் இணையதளங்களுக்கு உரிய உத்தரவு பிறப்பிக்க மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. சம்பந்தப்பட்ட சினிமாவுக்கு காப்பிரைட் வைத்திருப்பவர்கள் அல்லது அதிகாரபூர்வ நபர்களிடம் இருந்து புகார்களை பெறவும், உரிய உத்தரவு பிறப்பிக்கவும் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்துக்கும், திரைப்பட தணிக்கை வாரியத்துக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

அஜித்குமார் கொலை வழக்கு:

# தாய், தம்பியிடம் சி.பி.ஐ. விசாரணை

**சிவகங்கை, ஜூலை 29-**

அஜித் குமார் கொலை வழக்கு தொடர்பாக அவரது தாய், தம்பியிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள மடப்புரம் காளி கோவில் காவலாளி அஜித்குமாரை, நகை திருடியதாக அளிக்கப்பட்ட புகாரில் அழைத்து சென்ற தனிப்படை போலீசார், விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்ததில், அவர் உயிரிழந்தார். இந்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த விவகாரம் தமிழ்நாடு முழுவதும் பேசுபொருளாகிய நிலையில், இந்த சம்பவத்தில் ஈடுபட்ட தனிப்படை காவலர்கள் 5 பேரும் கைது செய்யப்பட்டனர். அதே போல் அஜித்குமார் குடும்பத்தினரிடம் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மன்னிப்பு கேட்டதோடு, உரிய நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டார். விசாரணை அறிக்கையை சி.பி.ஐ. அதிகாரிகள் ஆகஸ்ட் 20 ஆம் தேதிக்குள் தாக்கல் செய்ய மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. சி.பி.ஐ. தரப்பில் விசாரணை அதிகாரியாக டெல்லியைச் சேர்ந்த மோகித் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தை கொலை வழக்காகப் பதிவு செய்து, சி.பி.ஐ. சிறப்பு குற்றப்பிரிவு டிஎஸ்பி மோகித்குமார் தலைமையிலான அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். கடந்த 14-ம் தேதி விசாரணை துவங்கிய நிலையில், மடப்புரம் அஜித்குமார் கொலை வழக்கில் அவரது தாய், தம்பியை மதுரை ஆத்திக்குளத்தில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்துக்கு நேற்று இருவரையும் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகிறது. 7 பேர் கொண்ட 2 குழு, இருவரையும் வாகனத்தில் சி.பி.ஐ. அலுவலகத்துக்கு அழைத்து சென்றது. 15-வது நாள் விசாரணையை அஜித்குமார் வீட்டில் தொடங்கியுள்ளது சி.பி.ஐ..

# ராஜேந்திர சோழனுக்கு சிலை: திருமாவளவன் மகிழ்ச்சி

**அரியலூர், ஜூலை 29-**

ராஜராஜசோழன் மற்றும் ராஜேந்திர சோழனின் திருவுருவ சிலைகள் நிறுவப்படும் என்று பிரதமர் கூறியது மகிழ்ச்சியளிக்கிறது என திருமாவளவன் கூறினார்

கங்கைகொண்ட சோழபுரத்தில் ஆடி திருவாதிரை நிறைவு நாள் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் சிதம்பரம் தொகுதி எம்.பி.யும், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவருமான தொல்.திருமாவளவன் கலந்து கொண்டார். நிகழ்ச்சி முடிந்ததும் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அதில் கூறியதாவது:-

கங்கைகொண்ட சோழபுரத்திற்கு பிரதமர் மோடி வருகை தந்து வழிபாடு செய்ததுடன், ஆடித் திருவாதிரை விழாவில் பங்கேற்று முதலாம் ராஜேந்திர சோழனின் சாதனை குறித்து பேசியது அனைவருக்கும் மகிழ்ச்சியளித்துள்ளது.

மேலும் ராஜராஜசோழன் மற்றும் ராஜேந்திர சோழனின் திருவுருவ சிலைகள் தமிழகத்தில் நிறுவப்படும் என்று பேசியுள்ளது இந்த தொகுதியின் எம்.பி.யாகவும், மண்ணின் மைந்தனாகவும் பெருமையாக உள்ளது, இவ்வாறு கூறினார்.

# நெல்லையில் பட்டப்பகலில் ஐ.டி. ஊழியர் வெட்டிக்கொலை

## காதலியின் சகோதரன் வெறிச்செயல்

**நெல்லை, ஜூலை 29-**



நெல்லையில் பட்டப்பகலில் ஐ.டி. ஊழியர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

நெல்லை பாளையங்கோட்டை கே.டி.சி.நகர் பகுதியை சேர்ந்தவர் சரவணன். இவரது மனைவி கிருஷ்ண குமாரி. இந்த தம்பதிக்கு சுர்ஜித் (வயது 24) என்ற மகனும், ஒரு மகளும் உள்ளனர். சரவணனும், கிருஷ்ணகுமாரியும் மணிமுத்தாறு பட்டாலியன் போலீசில் சப்-இன்ஸ்பெக்டர்களாக பணிபுரிந்து வருகின்றனர். இதற்கு முன் சரவணனின் குடும்பத்தினர் தூத்துக்குடியில் வசித்து வந்தனர். அப்போது அவரது மகள் படித்த பள்ளிக்கூடத்தில் ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலம் பகுதியை சேர்ந்த விவசாயி சந்திரசேகர் மகன் கவின்குமார் (வயது 26) படித்துள்ளார்.

அப்போது, பள்ளியிலேயே 2 பேருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு காதலித்து வந்தனர். பள்ளி, கல்லூரி படிப்பை முடித்த கவின்குமார் சென்னையில் ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். அவர் சமீபத்தில் சொந்த ஊருக்கு வந்துள்ளார். இதையடுத்து, கவின்குமார் அடிக்கடி ஏரலில் இருந்து பைக்கில் பாளையங்கோட்டைக்கு சென்று தனது காதலியை சந்தித்து பேசிவிட்டு சென்றதாக கூறப்படுகிறது.

இந்த காதல் விவகாரம் இளம்பெண்ணின் குடும்பத்தினருக்கு தெரியவந்தது. இருவரும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் பெண்ணின் குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மதியம் கவின்குமாரின் தாத்தாவுக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது. எனவே, கவின்குமார் மற்றும் அவரது குடும்பத்தினர் தாத்தாவை அழைத்துக்கொண்டு பாளையங்கோட்டையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றனர். இதனை எப்படியோ கவின்குமார் காதலியின் தம்பி சுர்ஜித் அறிந்துகொண்டார்.

இதற்கிடையே தாத்தாவிற்கு சிகிச்சை முடிந்ததும் கவின்குமார் சொந்த ஊருக்கு செல்வதற்காக மருத்துவமனையில் இருந்து வெளியே வந்தார்.

அப்போது அங்கு தயாராக நின்று கொண்டிருந்த சுர்ஜித், கவின்குமாரை பேச அழைத்துள்ளார். அப்போது, திடீரென இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த சுர்ஜித் மறைத்து வைத்திருந்த அரிவாளால் கவின்குமாரை சரமாரி வெட்டிவிட்டு தப்பிஓடினார். இதில் படுகாயம் அடைந்த கவின்குமார் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடி துடித்து உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவலறிந்த சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார், கொல்லப்பட்ட கவின்குமாரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், சி.சி.டி.வி. காட்சிகள் அடிப்படையில் விசாரணையை தீவிரப்படுத்திய போலீசார் கவின்குமாரை வெடிக்கொலை செய்து விட்டு தப்பியோடிய சுர்ஜித்தை கைது செய்துள்ளனர். காதல் விவகாரத்தில் நெல்லையில் பட்டப்பகலில் ஐ.டி. ஊழியர் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த கொலை சம்பவத்தில் இளம்பெண்ணின் பெற்றோரான சப்-இன்ஸ்பெக்டர்களாக பணியாற்றி வரும் சரவணனும், கிருஷ்ணகுமாரிக்கும் தொடர்பு இருப்பதாக உயிரிழந்த கவின்குமாரின் குடும்பத்தினர் குற்றஞ்சாட்டினர். இதையடுத்து, சப்-இன்ஸ்பெக்டர்கள் 2 பேர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. 2 பேரும் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# ரூ. 37 கோடி பரிசு கொண்ட முதல்வர் கோப்பை விளையாட்டு போட்டி: ஆக.16 வரை முன்பதிவு

**சென்னை, ஜூலை 29-**

ரூ. 37 கோடி பரிசுத்தொகை கொண்ட முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள 16.8.2025 வரை முன்பதிவு செய்துகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதல்வர் தமிழ்நாட்டினை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக உருவாக்கி வருகின்றார்கள். 2025 ஆம் ஆண்டு முதல்வர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் அனைத்து மாவட்ட மற்றும் மண்டல அளவில் வருகின்ற 22.8.2025 முதல் 12.9.2025 வரை நடத்தப்படவுள்ளன.

மாவட்ட அளவில் 25 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மண்டல அளவில் 7 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் சிறப்பு மதிப்பெண்கள் மற்றும் சலுகைகள் பெற இயலும்.

ரூ. 37 கோடி மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025 ஆம் ஆண்டு முதல்வர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலமாக பதிவுகள் நடைபெற்று வருகின்றன. முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் அனைவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான https://cmtrophy.sdat.in / https://sdat.tn.gov.in வாயிலாக தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள 17.7.2025 முதல் முன்பதிவு நடைபெற்று வருகிறது. முன்பதிவு செய்திட கடைசி நாள் 16.8.2025 மாலை 6.00 மணி ஆகும். காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 95140 00777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# தி.மு.க., பா.ஜ, அரசியல் நாடகத்தை மக்கள் ஏற்கமாட்டார்கள்: விஜய்

**சென்னை, ஜூலை 29-**



பா.ஜ.க.வும் தி.மு.க.வும் இணைந்து நடத்தும் அரசியல் ஆதாய நாடகத்தை இனியும் தமிழக மக்கள் ஏற்கமாட்டார்கள் என த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.


த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிப்பதாவது:-

இன்றளவும் தமிழ் மண்ணுக்கும் தமிழகத்திற்கும் தனிப்பெரும் அடையாளமாக இருக்கும் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு, தமிழையும் தமிழ்நாட்டையும் ஓரவஞ்சனையுடன் ஒதுக்கும் மத்திய பா.ஜ.க. அரசின் பிரதமர் சோழர்களின் பெருமை குறித்து நமக்குப் பாடம் எடுப்பது போலவும் பேசிச் சென்றுள்ளார். 75 ஆண்டுகளைக் கடந்த கட்சி என்றும் தமிழ், தமிழர் அடையாளம் என்றாலே அது தங்களுக்கு மட்டுமே உரியது என்பது போலவும் பொய்யாக மார் தட்டிக் கொள்ளும் தற்போதைய ஆளும் கட்சியான தி.மு.க., சோழப் பேரரசர்களுக்கு உரிய மரியாதையை முன்பே முழுமையாக அளித்திருந்தால் இப்போது தமிழர்களுக்கு எதிராக இருக்கும் மத்திய பா.ஜ.க. அரசு இதைக் கையில் எடுத்திருக்காது.

சோழப் பேரரசின் பெருமையைக் கொண்டாட வேண்டியது தங்கள் கடமை என்பதை மறந்து, மத்திய பா.ஜ.க. கையில் அடைக்கலம் புகுந்து தமிழகத்தை அடகு வைத்தது போலவே இப்போது தமிழர்களின் பெருமையையும் அடகு வைத்துள்ளது தி.மு.க. அரசு.


கீழடியில் கிடைத்த அசைக்க முடியாத ஆதாரங்களை மறைத்து, தமிழர் நாகரிகத்தையும் வரலாற்றையும் மூடி மறைக்க முயலும் மத்திய பா.ஜ.க. அரசு, இப்போது இங்கு வந்து சோழர்களின் பெருமை பற்றிப் பேசி உள்ளது, மறைமுகமாகப் பா.ஜ.க.வும் தி.மு.க.வும் ஓரணியில் இருக்கும் கபடதாரிகளாக இணைந்து நடத்தும் அரசியல் ஆதாய நாடகத்தை இனியும் தமிழக மக்கள் ஏற்கமாட்டார்கள். இவர்கள் இருவரின் மறைமுகமான கபட நாடக அரசியலுக்கான தக்க பதிலடியை 2026 தேர்தலில் தமிழக மக்கள் உறுதியாகத் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....




**நா**ட்டின் துணை ஜனாதிபதியாக இருந்த ஜெகதீப் தன்கர் ஏன் ராஜினாமா செய்தார் என்பது எனக்கு தெரியாது. ஆனால் அவர் எப்போதும் மத்திய அரசுக்கு ஆதரவாக செயல்பட்டு வந்தார். என்ன நடந்தது என்பதை அவர் தான் கூற வேண்டும். அதாவது ராஜினாமாவுக்கான காரணத்தை அவர் தான் தெரிவிக்க வேண்டும்.

**- மல்லிகார்ஜுன கார்கே**




**ரா**ஜேந்திர சோழனுக்கு விழா எடுத்து இருக்கிறோம் என பிரதமர் மோடி வட மாநிலத்தில் பேச வேண்டும். 10 ஆண்டுகளில் தமிழகத்துக்கு ரூ.3 லட்சம் கோடி கொடுத்து இருப்பதாக மோடி கூறுகிறார். அமித்ஷா ரூ.6.80 லட்சம் கோடி என்று சொல்லிகிறார். எல்.முருகன் ரூ.12 லட்சம் கோடி என்று சொல்லிகிறார். இதில் யார் சொல்வது உண்மை ?

**- செல்வப்பெருந்தகை**



**ப**ஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு என்.ஐ.ஏ. எடுத்த நடவடிக்கைகள் குறித்த தகவல்களை வெளியிட பாஜக அரசாங்கம் விரும்பவில்லை. அவர்கள் பயங்கரவாதிகளை அடையாளம் கண்டார்களா? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? அவர்கள் பாகிஸ்தானிலிருந்து வந்தவர்கள் என்று ஏன் கருதுகிறீர்கள்? அதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

**- ப. சிதம்பரம்**



**மா**ணவ, மாணவியரின் உயர் கல்வியை மேம்படுத்தும் வகையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரந்தரமாக உதவிப் பேராசிரியர்களை நியமிக்கவும். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து கொண்டிருக்கும் கவுரவ விரிவுரையாளர்களை பணி நிரந்தரம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- ஓ.பன்னீர்செல்வம்**



சென்னை சைதாபேட்டை தொகுதி கோடம்பாக்கம் மண்டலத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 100 கிலோ வாட்ஸ் மின் மாற்றியினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார். இதில் மண்டல குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை அடையாறு மண்டலத்தில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.21.60 லட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு மைய கட்டிட பணியினை துணை மேயர் மகேஷ் குமார் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் தெற்கு வட்டார துணை ஆணையர் அதாப் ரசூல் உள்ளார்.



திருவொற்றியூர் அதிமுக பகுதி செயலாளர கே.குப்பன் 2வது மகன் மோகன் 2ஆம் ஆண்டு நினைவு நாள் திருவொற்றியூர் தேரடி மற்றும் காலடிப்பேட்டை மார்க்கெட்டில் நடைபெற்றது. இதில் முன்னாள் எம்எல்ஏ டாக்டர் கே.குப்பன் தலைமையில் காஞ்சிபுரம் மண்டல தொழில் நுட்ப பிரிவு தலைவர் மாமன்ற கவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் ஏற்பாட்டில்முன்னாள் அமைச்சர்கள் சி.பொன்னையன், மாதவரம் வி.மூர்த்தி ஆகியோர் 1000 பேருக்கும் மேற்பட்டோருக்கு வேட்டி சேலை லுங்கியுடன் மதிய உணவு வழங்கினார்.

# சென்னை கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் சி.எம்.டி.ஏ. மற்றும் நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள்: அமைச்சர்கள் எ.வ.வேலு, .பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு



**சென்னை,ஜூலை.29**

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, அகரம், ஜெகநாதன் தெருவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் மறுவாழ்வு மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையத்தினையும், சென்னை, பேப்பர் மில்ஸ் சாலை, ராஜா தோட்டத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.27.71 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 161 புதிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும், சென்னை, பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் நவீன சந்தையும், சென்னை, பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் 'மக்கள் சேவை மையத்தையும் மற்றும் கொளத்தூர் ரெட்டேரி அருகிலுள்ள ஏரிக்கரையை ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் முன்னேற்றப் பணிகள் குறித்தும் மற்றும் கொளத்தூர் ரெட்டேரி சாலை சந்திப்பில் உள்ள 7 மீட்டர் அகலமும், 600 மீட்டர் நீளமும் கொண்ட சேவை சாலைகளை சீரமைப்பது குறித்தும் மற்றும் ரூ.5 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரெட்டேரி உயர்மட்ட பாலத்தின்கீழே அழகுபடுத்துதல் பணிகள் அமைச்சர் திரு.எ.வ.வேலு அமைச்சர்பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அமைச்சர் திரு.எ.வ.வேலு செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது :கொளத்தூர், ரெட்டேரி சாலையில் உள்ள உயர்மட்ட மேம்பாலத்தின்கீழ் அழகுபடுத்தவும் மற்றும் சேவை சாலைகளை புதுப்பிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தார்கள். அந்த வகையில் 7 மீட்டர் அகலமும், 600 மீட்டர் நீளமும் கொண்ட நடைப்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் சி.எம்.டி.ஏ. சார்பில் கொளத்தூர் ஏரியை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஒப்பந்ததாரர் 2025 ஆகஸ்ட் மாதத்திற்குள் பணிகள் முடிவடையும் என தெரிவித்தார். அக்டோபர் மழைக்கு முன்பாக பணிகள் முடிக்க வேண்டும் என அறிவுறுத்தி உள்ளோம்.

கொளத்தூர், ரெட்டேரி சாலையில் உள்ள உயர்மட்ட மேம்பாலத்தின் கீழ் வருவதால் நெடுஞ்சாலைத்துறை சார்பாக ஒரு சில பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக இன்று ஆய்வு செய்தோம். நெடுஞ்சாலை துறையைச் சேர்ந்த கோட்ட பணியாளர்கள் மற்றும் பொறியாளர்கள் பணியை மேற்கொள்ள உள்ளனர். கொளத்தூர், செந்தில் நகரில் நகரும் படிக்கட்டு அமைக்கப்படும் என கூறினேன். அது தொடர்பான வழக்கு நடைபெற்றது. அரசு சார்பாக வழக்கு வெற்றி பெற்றுள்ளது. ரூபாய் 15.42 கோடி செலவில் அதற்கான பணிகள் தொடங்கி விட்டது. இந்த ஆண்டு டிசம்பர் மாதம் அதன் பணிகள் முடிவடையும். ரூபாய் 139 கோடி செலவில் பாடி ரயில்வே மேம்பால பணிகள் நடைபெற்று வருகிறது. 70 சதவீதம் பணிகள் நடைபெற்றுள்ளது. மீதம் உள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

கொளத்தூரில் பிறக்க முடியவில்லை என திருவண்ணாமலை வாக்காளர்கள் வருத்தப்படுகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கு ஆயிரம் பணிகள் இருந்தாலும் மாதம் மாதம் தனது தொகுதிக்கு வருகிறார். அதை பார்த்து நாங்களும் எத்தனை பணிகள் இருந்தாலும் தொகுதிக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம் வருகிறது.

திமுகவை எடப்பாடி பழனிசாமி உருட்டுக்கள் பலவிதம் என விமர்சனம் செய்தது குறித்தான அமைச்சர்எ.வ.வேலு பதில் :

அவர் ஆட்சியில் நடைபெறுவதை மீண்டும் நினைவுபடுத்துகிறார். யார் ஆளுங்கட்சியாக இருந்தாலும் மக்கள் கோரிக்கை நிறைவேற்றுவது தான் பார்க்க வேண்டும் அந்த ஆட்சியை விட இந்த ஆட்சி மக்களுடைய திட்டங்களை நிறைவேற்றுவதில் மும்முரமாக உள்ளது.

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தை அற்புதமான திட்டம் என தமிழ்நாடு வரவேற்கிறது. தங்கள் அடையாளத்தை காட்டிக் கொள்வதற்காக மக்கள் மறந்துவிடக்கூடாது வெளியே வந்து ரொம்ப நாள் ஆகிவிட்டதால் சுற்றுப் பயணத்தை தொடங்கி இருக்கிறார். தேர்தல் நேரத்தில் மக்கள் எடை போட்டு பார்ப்பார்கள். எங்கள் அணி 200க்கு 200 வெற்றி பெறும் எனவும் எதிர்கட்சித் தலைவர். நாங்கள் அவரை மதிக்கிறோம் தனது அடையாளத்தை காட்டி கொள்வதற்காக அங்கொன்றும் இங்கொன்றும் வந்தது எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார் பேசுவதில் உண்மை இல்லை.

பிரதமர் மோடி தமிழகம் வந்துள்ளது குறித்தான கேள்விக்கு அமைச்சர் திரு.எ.வ.வேலு பதில்

நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஒன்றிய பிரதமர் வந்தார். சட்டமன்றத் தேர்தல் வரப்போகிறது அதற்காக வருவார். இந்த மண் திராவிட மண், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் என மும்மூர்த்திகளால் பண்பட்டு இருக்கின்ற இந்த மண் எந்த காலத்திலும் பிரதமர் வந்தாலும், அவரின் சகாக்கள் வந்தாலும் இந்த மண்ணிலே காவிகள் எந்தகாலத்திலும் காலூன முடியாது.

சைதாப்பேட்டை மேம்பாலம் எப்போது முடிவுக்கு வரும் என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களின் பதில் :

நேற்று முன்தினம் கூட சைதாப்பேட்டை மேம்பால பணிகளை மூன்று கிலோ மீட்டர் நானே நடந்து சென்று ஆய்வு மேற்கொண்டோம். பொங்கல் தினத்தில் சைதாப்பேட்டை மேம்பாலத்தை முதலமைச்சர் அவர்கள் திறக்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது என்றார்.

# சென்னையில் இன்று மின்தடை ஏற்படும் இடங்கள்..

**சென்னை ஜூலை 29-**

சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.அந்த வகையில், நாளை மின் தடை செய்யப்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சென்னையில் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி,கே.கே.நகர்: வளசரவாக்கம், விருகம்பாக்கம், ஆழ்வார் திருநகர்.தாம்பரம்: மாம்பாக்கம், வேங்கைவாசல், மப்பேடு, அகரம் தென், படுவாஞ்சேரி, கஸ்பாபுரம், செயலக காலனி, கேம்ப் ரோடு, செம்பாக்கம், அகரம் மெயின் ரோடு, சேலையூர், விஜிபி சீனிவாச நகர், விஜிபி சரவணா நகர், காயத்ரி நகர், கிருஷ்ணா நகர், திருவாஞ்சேரி, நூத்தஞ்சேரி, கணபதி நகர், ஞானா நகர், பாரதிதாசன் நகர், சக்தி நகர், காயத்திரி கார்டன், ராஜகீழ்பாக்கம் பகுதி, கௌரிவாக்கம், சந்தோஷபுரம், ரிக்கி கார்டன், ராஜாஜி நகர், சுந்தரம் காலனி, பராசக்தி நகர், சத்ய சாய் நகர், கோகுல் நகர், ஷா அவென்யூ, காமராஜ் நகர், ஜெயந்திரா நகர், தரகேஸ்வரி நகர், கேவிஜசி நகர், வேளச்சேரி மெயின் ரோடு, பழனியப்பா நகர், சாந்தம்மாள் நகர், விக்னராஜபுரம், விஜயநகரம், கே.கே.சாலை, சிவகாமி நகர், பாத்மாவதி நகர், அலமேலுபுரம், கண்ணன் நகர், இந்திரா நகர், சோழன் நகர், சுதர்ஷன் நகர், டியானா ஸ்கை சிட்டி, திருமால் நகர், அன்னை சத்யா நகர், கணேஷ் நகர், மாருதி நகர், ஸ்ரீ தேவி நகர்.

# குட்கா மற்றும் மாவா பாக்கெட்டுகளை விற்பனை: இரு பெண்கள் கைது

**சென்னை ஜூலை 29-**

சென்னை காசிமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், ம்காசிமேடு, இந்திரா நகர் பாலம் அருகே கண்காணிப்பு பணியில் இருந்தபோது, அங்கு சந்தேகத்திற்கிடமாக வந்த 2 பெண்களை நிறுத்தி விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் மாவா பாக்கெட்டுகளை விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.அதன்பேரில், சட்டவிரோதமாக குட்கா மற்றும் மாவா பாக்கெட்டுகளை விற்பனைக்காக வைத்திருந்த 1.ராதா, 2.ரமணி, ஆகிய 2 பெண்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1.2 கிலோ குட்கா மற்றும் 2 கிலோ மாவா பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் கைது செய்யப்பட்ட பெண்கள் இருவரும் சேர்ந்து, ஆந்திரா மாநிலம், நெல்லூரில் இருந்து குட்கா மற்றும் மாவா பாக்கெட்டுகளை மொத்தமாக வாங்கி வந்து, காசிமேடு பகுதியில் உள்ள மீனவர்களுக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது. மேலும் எதிரி ராதா மீது ஏற்கனவே 1 குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும், விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# ஜெ.ஜெ.நகரில் ரவுடியை கொல்ல முயன்ற 6 பேர் கைது

**சென்னை ஜூலை 29-**

ஜெ.ஜெ.நகர் மற்றும் மதுரவாயல் காவல் நிலையங்களில் 6 பேரை போலிசார் கைது செய்தனர்.

**கொல்ல முயற்சி**

மேலும் 1 சிறுவனிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.கடந்த 2024ம் ஆண்டுஜெ.ஜெ நகர் காவல் நிலைய பகுதியில் காளிதாஸ் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் தொடர்புடைய எதிரிகளையும் அது குறித்து ஏற்பட்ட முன்விரோத நடவடிக்கைகளையும் தொடர்ந்து கண்காணித்து வந்த நிலையில், ஜெ.ஜெ.நகர் கலைவாணர் காலனியில் உள்ள பார்க் அருகில் 2 பேரை பார்க்கில் அமர்ந்திருந்த சிலரை தாக்கி கொலை செய்ய திட்டமிட்டு வந்துள்ளதாக, காவல் துறைக்கு கிடைத்த ரகசிய தகவல் வந்தது. இதன் பேரில் நேற்று முன் தினம் திருமங்கலம் உதவி ஆணையாளர் மற்றும் ஜெ.ஜெ.நகர் காவல் நிலைய சட்ட ஒழுங்கு ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினர் சம்பவயிடத்திற்கு சென்று சந்தேக நபர்கள் குறித்து விசாரணை செய்த நிலையில் சக்தி மற்றும் ஜெயந்த் ஆகிய இருவர் அவ்விடத்திலிருந்து தலைமறைவாகி விட்டனர்.

மேற்கண்ட இடத்தில் ஆயுதத்துடன் கூட்டாக அமர்ந்திருந்த 5 பேர் கொண்ட கும்பல் அவ்விடத்திலிருந்து ஓடி மறைந்த நிலையில் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஹரிகரன் ஜெ.ஜெ.நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட ஜெ.ஜெ.நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஆயுதத்துடன் தப்பி ஓடியவர்கள் 1.விரவீன் ராஜ் (எ) குட்டி, என்பவரை பிடித்து விசாரணை செய்து கொடுத்த தகவலின் பேரில் 2.தீபக், 3.பப்லு (எ) ராஜ் கணேஷ், 4.சித்தார்த், ஆகியோரை நேற்று ஜெ.ஜெ.நகர் பகுதியில் வைத்து கைது செய்து விசாரணை செய்தும், மேலும் 17 வயதுடைய 1 இளஞ்சிறாரிடம் விசாரணை செய்தனர். அவர்களிடமிருந்து 1 கத்தி மற்றும் 1 இரும்பு ராடு பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் விரவீன் ராஜ் (எ) குட்டி தாங்களுக்கு காளிதாஸ் என்பவருடைய சகோதரர் சக்தி என்பவருடன் முன்விரோதம் இருந்ததினால், அவர் தாக்க வரும் நேரத்தில் திரும்ப தாக்குவதற்கும், தற்சமயம் பணம் கையில் இல்லாததினால் வழிப்பறி மற்றும் கொள்ளையில் ஈடுபட ஆயுதங்களுடன் மேற்படி பார்க்கில் நண்பர்களுடன் பேசிக்கொண்டு இருந்ததாகவும், போலீசாரை கண்டதும் அங்கிருந்து தப்பிச்சென்றதாக தெரிவித்தனர். இதற்கிடையில் காவல்துறையினர் கொடுத்த தகவலின் பேரில் 1.சக்தி, 2.ஜெயந்தன், ஆகிய இருவரை தேடி வந்த நிலையில் மதுரவாயல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் மதுரவாயல் பெருமாள் கோயில் தெருவில் ரவிக்குமார் என்பவரிடம் மிரட்டி பணம் பறித்து வந்த வழக்கில் இருவரையும் மடக்கிப்பிடித்து நேற்று கைது செய்யப்பட்டனர். எதிரிகளிடமிருந்து 1 கத்தி மற்றும் யமஹா இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் முன்விரோதத்தில் தனது சகோதரர் காளிதாஸை கொலை செய்த எதிரிகள் திருட்டு மணி மற்றும் சிவா ஆகியேருடன் விரவீன் ராஜ் (எ) குட்டி உறுதுணையாக இருந்து கொலைக்கு காரணமாக இருந்ததால் விரவீன் ராஜ் (எ) குட்டியை, சக்தி திட்டமிட்டு கொலை செய்வதற்கு முயன்றதும். இதனை அறிந்து சக்தியை தாக்குவதற்கு விரவீன் ராஜ் (எ) குட்டி அவர்களது நண்பர்களுடன் சேர்ந்து திரும்ப தாக்குவதற்கும், மேலும் வழிப்பறி மற்றும் கொள்ளை அடித்திட காத்திருந்ததும் தெரியவந்தது. மேலும் இவர்கள் ஈடுபட்ட குற்ற நிகழ்வுகள் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. எதிரி பூண்டி ஆகிய காவல் நிலையங்களில் 7 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

# வடபழனி பகுதியில் கொலை வழக்கில் 3 பேர் கைது

**சென்னை ஜூலை 29-**

குரோம்பேட்டை, ஆதம்நகர் பகுதியில் வசித்து வந்த பரந்தாமன், என்பவர் கடந்த 27. ந் தேதி அன்று மதியம், வடபழனி, ஆற்காடு சாலையில் உள்ள மதுபான கடை அருகில் மது அருந்திக்கொண்டிருந்த போது, அங்கு வந்த வசந்தராஜ், சாந்தகுமார், விக்னேஷ்வரன் ஆகிய 3 பேரை , மேற்படி பரந்தாமன் வைத்திருந்த மதுபானத்தை எடுத்து குடித்துள்ளனர். இதனால் பரந்தாமனுக்கும் எதிரிகள் மூவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டதில் ஆத்திரமடைந்த மூவரும் பரந்தாமனை கையாலும், ஸ்பேனராலும் தாக்கியுள்ளனர். தாக்குதலில் இரத்த காயமடைந்த பரந்தாமனை அருகிலிருந்தவர்கள் உதவியுடன் மணிகண்டன் என்பவர் மீட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பரந்தாமன் சிகிச்சை பலனின்றி, 27. ந் தேதி அன்று இரவு உயிரிழந்தார். இது குறித்து மணிகண்டன் என்பவர் கொடுத்த புகாரின்பேரில், வடபழனி காவல் நிலையத்தில் கொலை உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.வடபழனி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்து, மேற்படி கொலை வழக்கில் தொடர்புடைய எதிரிகள் 1.வசந்தராஜ், 2.சாந்தகுமார், 3. விக்னேஷ்வரன், ஆகிய 3 பேரை கைது செய்தனர்.

# பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்ய சாலை சீரமைப்பு பணிகளை மாநகராட்சியே ஏற்க முடிவு

**சென்னை ஜூலை 29-**

சென்னையில் உள்ள சாலைகளில் பாதாள சாக்கடை, வடிகால், மின் புதைவடம், தனியார் நிறுவன கேபிள் பதிக்கும் பணி உள்ளிட்டவற்றுக்காக அடிக்கடி பள்ளம் தோண்டப்படுகிறது.

**சாலை சீரமைப்பு**

இதற்காக, அந்தந்த துறைகள் மாநகராட்சியிடம் அனுமதி பெற்று, கட்டணம் செலுத்தி, பணிகள் முடிந்த பின்னர் சாலையை சீரமைக்க வேண்டும். ஆனால், பணிகள் முடிந்த பிறகும் இந்த சாலைகள் சீரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாக காட்சியளிக்கிது. இதனால், வாகன ஓட்டிகள் சிரமப்படுகின்றனர்.சென்னையில் உள்ள பேருந்து வழித்தட சாலைகள், உட்புற சாலைகள், நெடுஞ்சாலைகள் மற்றும் கான்கிரீட் சாலைகளில் பள்ளம் தோண்டுவதற்கு அனுமதி பெறும் துறைகள், சாலையின் தன்மைக்கு ஏற்ப சீரமைப்பு கட்டணங்களை செலுத்த வேண்டும்.

ஆனால், பெரும்பாலும் இந்த துறைகள் நியமிக்கும் ஒப்பந்ததாரர்கள், மாநகராட்சி விதிகளை பின்பற்றுவதே இல்லை.மற்ற துறைகளின் ஒப்பந்ததாரர்கள் இதை பின்பற்றாமல், தரமற்ற முறையில் சாலையை சீரமைப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதற்கு தீர்வாக, சென்னை மாநகராட்சியே இனிமேல் அனைத்து சாலை மறுசீரமைப்பு பணிகளையும் முழுமையாக செய்ய முடிவு செய்துள்ளது. இதன்மூலம், சென்னையின் சாலைகள் முறையாகவும், தரமாகவும் பராமரிக்கப்படும். மக்கள் பயணிக்கும் சாலைகள் பாதுகாப்பாகவும், வசதியாகவும் மாறும். இது சென்னை மக்களுக்கு ஒரு பெரிய நிம்மதியைத் தரும்.

# பூந்தமல்லியில் காரில் குட்கா கடத்திய 4 வாலிபர்கள் கைது

**சென்னை ஜூலை 29-**

பூந்தமல்லியில் வெளி மாநிலங்களில் இருந்து பூந்தமல்லி வழியாக தடை செய்யப்பட்ட குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கடத்தி வருவதாக பூந்தமல்லி போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து பூந்தமல்லி இன்ஸ்பெக்டர் லாரன்ஸ், சப் இன்ஸ்பெக்டர்கள் ஆனந்தகுமார், சபரிநாதன் ஆகியோர் தலைமையில் போலீசார் நேற்று பூந்தமல்லி சுற்று வட்டார பகுதிகளில் தீவிரமாக கண்காணித்தனர்.அப்போது பூந்தமல்லி, அரசு மருத்துவமனை அருகே சந்தேகப்படும்படி சென்ற காரை மடக்கி சோதனை செய்தபோது காரில் இருந்தவர்கள் இறங்கி நாலாபுறமும் ஓட ஆரம்பித்தனர். அவர்களை விரட்டிச் சென்று மடக்கி பிடித்து சோதனை செய்தபோது காரில் தடை செய்யப்பட்ட குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.விசாரணையில் பிடிபட்டவர்கள் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த கிஷோர் குமார் (25), சரவணன் சிங் (23), கோதா சிங் (26), ராமாராம் (21) ஆகியோர் என்பதும் இவர்கள் பெங்களூரில் இருந்து காரில் குட்காவை காரில் கடத்தி வந்து சென்னை புறநகர் பகுதிகளில் விற்பனை செய்ய முயன்றதும் தெரிய வந்தது.

இவர்களிடமிருந்து 200 கிலோ குட்கா மற்றும் ஒரு கார் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் இந்த சம்பவத்தில் வேறு யாருக்கெல்லாம் தொடர்புள்ளது என்பது குறித்து விசாரித்து வருகின்றனர்.

# ஆட்டோ ஓட்டுநரை தாக்கி பணம் பறித்த 4 பேர் கைது


**சென்னை ஜூலை 29-**

சென்னை, அயனாவரம், திக்காகுளம் பகுதியில் வசித்து வரும் பாஸ்கரன், என்பவர் ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறார். இவர் கடந்த 25 ந்தேதி அன்று இரவு, வேலை முடித்துவிட்டு, மேற்படி அவரது வீட்டிற்கு அருகே ஆட்டோவை நிறுத்திக் கொண்டு இருந்தபோது, அங்கு வந்த 4 பேரை , பாஸ்கரனை கத்தியைக் காட்டி மிரட்டி பணம் கேட்டுள்ளனர். பாஸ்கரன் பணம் தர மறுக்கவே, அவரை கையால் தாக்கி, சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.300/-ஐ பறித்துக் கொண்டு, கத்தியால் ஆட்டோவின் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்திவிட்டு, நால்வரும் தப்பிச் சென்றனர். இது குறித்து பாஸ்கரன், அயானாவரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். அயானாவரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.குணாலன், 2.வசந்தகுமார், சென்னை, 3.விஜய், ஆகிய 3 பேரை கைது செய்தனர். மேலும் எதிரிகள் கொடுத்த தகவலின்பேரில், மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி 4.முகமது ரபீக், என்பவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 1 கத்தி மற்றும் 1 அரிவாள் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி குணாலன் மீது ஏற்கனவே 1 கொலைமுயற்சி உட்பட 4 குற்ற வழக்குகளும், , கஞ்சா, அடிதடி உட்பட 14 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

### ஆடிப்பூரத்தை முன்னிட்டு

# மேல்மலையனூர் அங்காளம்மனுக்கு 2 லட்சம் வளையல்களால் அலங்காரம்

## ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்



**செஞ்சி ஜூலை 29,**

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் ஆடிப்பூரத்தை முன்னிட்டு இன்று அங்காளம்மனுக்கு 2 லட்சத்து 10 ஆயிரம் வளையல்கள் அணிவிக்கப்பட்டு மகா தீபாரதனை நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் கோவிலில்ஆடிப்புரத்தை முன்னிட்டு இன்று காலையில் அம்மனுக்கு 2.10 லட்சம்வளையல்கள்அணிவிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு இன்று அதிகாலை மூலவர் அங்காளம்மனுக்கு பால் தயிர் இளநீர் தேன் உள்ளிட்டபூஜைப் பொருள்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகமும் ஆராதனையும் நடைபெற்றது. தொடர்ந்துமூலவர் அங்காளம்மனுக்கும், உற்சவர் அங்காளம்மனுக்கும் 2 லட்சத்தி 10 ஆயிரம்வளையல்கள் அணிவிக்கப்பட்டு மகா தீபாரதனை நடைபெற்றது.ஆடிப்பூரத்தை முன்னிட்டு இன்று காலையில் இருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வருகை தந்து சாமி தரிசனம் செய்தனர். இந்நிலையில் நேற்றுவளர்பிறை ஆடிமாதம் ஞாயிற்றுக்கிழமை என்பதால்அங்காளம்மன் கோவிலுக்கு காலையிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிலுக்கு வருகை தந்து பொங்கல் வைத்து அங்க பிரதட்சனை செய்தும்,குழந்தைகளுக்கு மொட்டை அடித்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.விழாவிற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் மேல்மலையனூர் பொறுப்பு சக்திவேல்,நடைமுறை அறங்காவலர் ஏழுமலைஅறங்காவலர்கள் சுரேஷ், மதியழகன், ,பச்சையப்பன், சரவணன், வடிவேல், சந்தானம், ஆய்வாளர் சங்கீதா, மேலாளர் மணி,கோவில் கண்காணிப்பாளர் பாக்கிய லட்சுமி

உள்ளிட்ட கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர்.பூஜைக்கான ஏற்பாடுகளை கோவில் பூசாரிகள்வினோத், ராஜேஷ்,பரமசிவம், சுந்தரமூர்த்தி முனுசாமி எழிலரசன் சரவணன் ஆகியோர் செய்து இருந்தனர்.

### செஞ்சி அரசு கலைக் கல்லூரியில்

# ஓரணியில் தமிழ்நாடு கல்லூரி மாணவர்களிடத்தில் உறுப்பினர் சேர்க்கை விழிப்புணர்வு பிரச்சாரம்

## செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்



**செஞ்சி ஜூலை-29,**

திமுக கழக மாணவரணி சார்பில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கை இயக்கம் குறித்து தமிழ்நாடு முழுவதும் உள்ள உயர் கல்வி நிறுவனங்கள் கல்லூரி மாணவர்களிடையே மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் அமைப்புகளின் மாணவர் அணி நிர்வாகிகள் மூலம் துண்டு பிரசுரங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களும் ,துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர்.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் செஞ்சி அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தின்எதிரில் மாணவர்களிடையே ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு கழக அரசின் நான்காண்டு சாதனைகள் மற்றும்உயர் கல்வி படிக்கும் மாணவ மாணவிகளுக்கான திமுக அரசு செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ் புதல்வன், இல்லம் தேடி கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மற்றும் சலுகைகள் குறித்து மாணவர்களிடம் எடுத்துக் கூறி அவர்களிடம் துண்டு பிரசுரங்களைவழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச்செல்வன்,நகர நிர்வாகிகள்சங்கர், செயல்மணி, நெடுஞ்செழியன், பேரூராட்சி கவுன்சிலர்கள் ஜான் பாஷா, சிவகுமார், நூர்ஜகான் ஜாபர், பொன்னம்பலம், மோகன்,சங்கீதா சுந்தரமூர்த்தி, நிர்வாகிகள் சிங்கம் சேகர், தொண்டரணி பாஷா,மாவட்ட மாணவரணி அமைப்பாளர்கள் ஞானசேகரன், சுபாஷ், பெனாசிர்,மயிலம் தெற்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் தன்னிரைவன்,துணை அமைப்பாளர்கள் தனஞ்செழியன், சூர்யா, மோகன், மதுகாந்தி,நகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் சுரேஷ்,அஜித், பாலா பிரசாந்த் கவின், வார்டுநிர்வாகிகள் ஏழுமலை, அசோக் குமார், கலைச்செல்வி, கோகுல்உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் நகர மாணவரணி அமைப்பாளர் வினோத் அனைவருக்கும் நன்றி கூறினார்.

மாண்புமிகு சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.2
(மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயம், சேலம்)
M.C.O.P. No. 465 / 2025
முத்துசாமி, த / பெ. ஆறுமுகம்,
க.எண். 4 / 77, நாடார் தெரு, வடுகம்,
இராசிபுரம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் – 637 407.
...... மனுதாரர்
/ எதிராக /
தமிழ்வவன், த/பெ. குப்புசாமி,
க.எண். 405, ஸ்டாலின் நகர்,
வீரட்டிபுரம்,
விழுப்புரம் மாவட்டம் – 605 602.
....4—ம் எதிர்மனுதாரர்
அறிவிப்பு
[illegible]
/ சமூகம் கோர்ட்டாருவர்கள் உத்தரவு படி /
S. MURUGESAN,B.A.,B.L.,
ADVOCATE & NOTARY,
IDAPPADI.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4. Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

கனம் மிகு முதலாவது கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் (IADM) புதுச்சேரி
O.S.NO. 721/2025
1. ஜெயலட்சுமி
2. தமிழ் எனகிற தமிழா
3. செந்தமிழ்செல்வி
4. செந்தமிழ் செல்வி
....வாதிகள்
எதிர்
வீரமணிகண்டன் ...... பிரதிவாதி
பொது அறிவிப்பு
[illegible]
K. சீனிவாசன்,
R. உமாகல்யாணி,
வழக்கறிஞர்கள், புதுச்சேரி.

மேன்மைமிகு திண்டிவனம் மோட்டார் வாகன தீர்ப்பாய நீதிபதி அவர்கள் சமூகம்
எம்.சி.ஓ.பி. 4/2025
[illegible]
-மனுதாரர்
-எதிர்-
[illegible]
-1-ம் எதிர்மனுதாரர்
1-ம் எதிர்மனுதாரருக்கு பொது அறிவிப்பு
[illegible]
ஆ.கோதண்டம் பி.ஏ.,பி.எல்.,
வழக்கறிஞர்,
திண்டிவனம்.



புதுச்சேரியில் கூறு நிதியின் மூலம் ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் முதலியார்பேட்டை தொகுதி வேல்ராம்பட்டில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட சமுதாய நல கூடத்தை முதல்வர் ரங்கசாமி திறந்து வைத்தார். அருகில் சபாநாயகர் செல்வம், எம்.எல்.ஏ.க்கள் கே.எஸ்.பி.ரமேஷ், சம்பத், செல்வம், அரசு செயலர் முத்தம்மா, இயக்குனர் இளங்கோவன் மற்றும் துறை அதிகாரிகள் உள்ளனர்.



புதுச்சேரி மேட்டுப்பாளையம் விடுதலை வீரர் இரா. சீனிவாசன் அரசு உயர்நிலைப் பள்ளியின் உலக தர சான்றிதழை முதல்வர் ரங்கசாமி வழங்கினார். அருகில் எம்.எல்.ஏ. கே.எஸ்.பி. ரமேஷ், பள்ளிக்கல்வி இயக்குனர் அமன் சர்மா, துணை இயக்குனர் சிவகாமி மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவ- மாணவிகள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் மாவட்டத்தில்

# நந்தன் கால்வாய் தூர்வாரும் பணி: கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் துவக்கி வைத்தார்



**விழுப்புரம் ஜூலை 29,**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், சோ.குப்பம் பகுதியில், நந்தன் கால்வாய் பாதுகாப்பு இயக்கம் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில், நந்தன் கால்வாய் தூர்வாரும் பணியினை கலெக்டர் ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான் துவக்கி வைத்தார்.

கலெக்டர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை புரிந்தபொழுது, மாவட்டத்திற்கு 10 அறிவிப்புகளை வெளியிட்டார்கள். இதில் ஒன்றாக நந்தன் கால்வாய் மூலம் சாத்தனூர் அணையிலிருந்து உபரி நீரை கொண்டு வருவதற்கான திட்டத்தினை அறிவித்தார்கள். இத்திட்டமானது ரூ.350 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நந்தன் கால்வாய் திருவண்ணாமலை மாவட்டம் துறிஞ்சலாற்றின் குறுக்கே உள்ள கீரனூர் அணைக்கட்டில் இடதுபுறம் உள்ள தலைப்பு மதகிலிருந்து ஆரம்பமாகிறது. நந்தன் கால்வாய் திருவண்ணாமலை மாவட்டத்தில் தொலைக்கல் 0 கி.மீ முதல் 12.400 கி.மீ வரையிலும், விழுப்புரம் மாவட்டத்தில் தொலைக்கல் 12.400 கி.மீ 37.880 கி.மீ வரையிலும் அமைந்துள்ளது. இத்தொலைகல்லிற்கு பிறகு விக்கிரவாண்டி மற்றும் விழுப்புரம் வட்டங்களில் சங்கிலி தொடர் ஏரி மூலம் ஏரிகளுக்கு நீர் வழங்கப்படுகிறது.

நந்தன் கால்வாய் மூலம், திருவண்ணாமலை மாவட்டத்தில், கீழ்பென்னாத்தூர் வட்டத்தில், 14 ஏரிகள் மூலம் 1566.20 ஏக்கரும், விழுப்புரம் மாவட்டத்தில், செஞ்சி வட்டத்தில், 10 ஏரிகள் மூலம் 1650.20 ஏக்கரும், விக்கிரவாண்டி வட்டத்தில், 9 ஏரிகள் மூலம், 2589.12 ஏக்கரும், விழுப்புரம் வட்டத்தில் 3 ஏரிகள் மூலம் 792.12 ஏக்கர் என மொத்தம் 36 ஏரிகள் மூலம் 6597.64 ஏக்கர் பரப்பளவில் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

கடந்த வருடம் ஏற்பட்ட பெஞ்சல் புயல் தாக்கத்தினால் நந்தன் கால்வாய் கரையோரப்பகுதிகள் சேதமடைந்தது. இதனை சீர் செய்திட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். அதனால் நிரந்தரமாக சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் விதமாக ரூ.75.00 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்றைய தினம், எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ளும் விதமாக நந்தன் கால்வாய் பாதுகாப்பு இயக்கம் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில், நந்தன் கால்வாய் தூர்வாரும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு தன்னார்வ நிறுவனங்கள் மூலம் ரூ.19 இலட்சம் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், மாவட்ட ஆட்சியர் விருப்ப நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் என மொத்தம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணியில் எக்ஸ்னோரா இன்டர்நேஷனல், என்டிஎஸ்ஓ, நம்மால் முடியும், எம்.என் காயத்ரி சார்டிஸ் ஆகிய தன்னார்வ நிறுவனத்துடன் மாவட்ட நிர்வாகம் இணைந்து தூர்வாரும் பணிகளை மேற்கொள்கிறது. இதன் மூலம், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 22 ஏரிகள் மூலம், விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவதோடு, இப்பகுதியினைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் நிலை உருவாகும் என கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, செஞ்சியில், என்.ஆர்.பேட்டை, எம்.ஜி.ஆர் நகர் பகுதியில், நீண்ட காலமாக குடியிருந்து வரும் நபர்களின் குடியிருப்பு வீடுகளை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில், நீர்வளத் துறை உதவி செயற்பொறியாளர் ஐயப்பன், உதவி பொறியாளர் சத்யா, செஞ்சி வருவாய் வட்டாட்சியர் துரை செல்வம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூரில் புதிய ஆவின் கிளை: நல்லதம்பி எம்.ல்.ஏ. திறந்து வைத்தார்



**திருப்பத்தூர்,ஜூலை ;29-**

திருப்பத்தூரில் திவாகர் அரசன் போஸ்கோ நகர் கடை திறப்பு விழாவில் திருப்பத்தூர் கந்திலி ஒன்றியத்தில் விஜயசாந்தி பள்ளி எதிரில் புதியதாக திறக்கப்பட்ட ஆவின் பாலகத்தை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி எம்.ல்.ஏ. திறந்து வைத்து சிறப்பு அழைப்பாளராக ரமேஷ் குமார் பொது மேலாளர் ஆவின் பிரசாத் ஆவின் மேலாளர் திருப்பத்தூர் மற்றும் ஒன்றிய குழு தலைவர் திருமுருகன் மோகன்ராஜ் ஒன்றிய பொறுப்பாளர் கந்திலி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஆவின் நெய் வாங்கி தொடங்கி வைத்தார் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி.

# ஏ.பி.ஜே.அப்துல் கலாம் வல்லரசு இந்தியா இயக்கத்தின் சார்பில் செஞ்சியில் போட்டித் தேர்வுக்கான இலவச மையம்

## பேரூராட்சி மன்ற தலைவர் மொத்தியார் அலிமஸ்தான் தொடங்கி வைத்தார்



**செஞ்சி ஜூலை 29.**

மறைந்த ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டுவிழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி ராஜேந்திர நகர் 6வது தெருவில் மக்கள் ஜனாதிபதி ஏபிஜே அப்துல் கலாம் ஐ.ஏ.எஸ். அகாடமி மற்றும் ஏபிஜே அப்துல் கலாம் வல்லரசு இந்தியா இயக்கம் சார்பில் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், டி.என்.பி.எஸ்.சி, நீட், ஐ.ஐ.டி ,ஜே.இ.இ, ரயில்வே மற்றும் வங்கிகள் உள்ளிட்ட போட்டி தேர்வுக்கானஇலவச பயிற்சி வகுப்பு மையம் தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

முதுநிலைவருவாய் ஆய்வாளர் கண்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் கலந்து கொண்டுமறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ பி ஜே அப்துல் கலாமின் திருவுருவப் படத்திற்கு மலர் மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து ஐ. ஏ. எஸ், ஐ. பி .எஸ், ரயில்வே மற்றும் வங்கி உள்ளிட்ட போட்டி தேர்வுக்கானஇலவச பயிற்சி வகுப்பு மையத்தினை குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இதையடுத்து மையத்தில் அமைக்கப்பட்ட நூலகத்தினை பார்வையிட்ட பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பினையும், பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணப் பொருட்களையும் வழங்கினார்.

நிகழ்ச்சியில்ஆரணி தொகுதி பார்வையாளர் அண்ணாதுரை, செஞ்சிக்கோட்டை நீர் ஆதார அமைப்புசங்கத்தின் செயலாளர் சுரேஷ், ஒருங்கிணைப்பாளர்கள் பன்னீர்செல்வம், விஜயலட்சுமி, உதவும் உள்ளங்கள் ஜான் சத்தியசீலன்,செக்கோவர் பணியாளர்கள் ஜெயசீலன்,அரவிந்தன்,உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.



புதுச்சேரி சங்கரதாஸ் சுவாமிகள் நாடக சபா சார்பில் நடைபெற்ற மனோன்மணியம் நாடகத்தில் நடித்த கலைஞர்களுக்கும், நலிந்த கலைஞர்களின் வாரிசுகளுக்கு கடந்த வருடம் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ,மாணவிகளுக்கு நிதி உதவியை திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் மு. பிரபாகரன் வழங்கினார்.



புதுச்சேரி அகில இந்திய சிங்காரவேலர் முன்னேற்ற கழகம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி செங்கொடி ஆர்ப்பாட்டம்தலைவர்கவிஞர்பிஜிஆனந்தன்தலைமையில் நடைபெற்றது.

### கிருஷ்ணா கல்வி குழுமம் சார்பில்

# இயற்கை வள பாதுகாப்பு தின விழிப்புணர்வு மனித சங்கிலி

**அரக்கோணம் ,ஜூலை 29**

இயற்கை வள பாதுகாப்பு நாள் உலகம் முழுவதும் அனுஷ்டிக்கபடுகிறது

அதன் ஒரு பகுதியாக . இந்த நாளின் முக்கியம் கருதி அரக்கோணம் ஸ்ரீகிருஷ்ணா கல்வி நிறுவனம் மற்றும் மித்ரா (பெண்கள் அணி) ரோட்டரி சங்கம் இணைந்து 1000 மாணவர்கள் பங்கு கொண்ட விழிப்புணர்வு மனித சங்கிலி நடைபெற்றது.

மனிதர்கள் உயிர்வாழ நிலம், நீர், காற்று, வன உயிரினங்கள் கனிமங்கள் மிக அவசியம் கருத்தில் கொண்டு இவைகளை பாதுகாக்க வேண்டி நடத்தபட்ட விழிப்புணவு மனித சங்கிலியில் ஒவ்வொரு மாணவர்கள் கைகளில் பதாகைகளை ஏந்தி நின்றனர்.

அரக்கோணம் ஸ்ரீகிருஷ்ணா கல்வி நிறுவனங்களின் அறங்காவலரும், மித்ரா ரோட்டரி சங்க தலைவருமான கவிதா ரவிக்குமர் தலைமை ஏற்று 1000 மாணவர்கள் கொண்ட விழிப்புணர்வு மனித சங்கிலியை தொடங்கி வைத்தார். இதில் சிறப்பு விருந்தினர்களாக

அரக்கோணம் வட்டாட்சியர் வெங்கடேசன், மின்சாரத் துறை செயற் பொறியாளர் சரவணன் , அரக்கோணம் கோட்ட வன அலுவலர் தமிழரசன்,அரக்கோணம் ரோட்டரி சங்க செயலாளர் லட்சுமிபதி நகர காவல் துணை ஆய்வாளர் பாலாஜி நகர போக்குவரத்து காவல் துணை ஆய்வாளர் செல்வராஜ் மற்றும் வருவாய்துறை காவல் துறையினர் பொது மக்கள் பலரும் ஆர்வத்துடன் மனித சங்கிலியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அரக்கோணம் டி ஆர் எஸ் குளோபல் பள்ளி முதல்வர் கவிதா அனைவருக்கும் நன்றி கூறினார் நிகழ்ச்சி ஏற்பாடுகளில் கல்வி குழும நிர்வாக அலுவலர் சுரேஷ் உடன் பேராசிரியர் வீரமணி மற்றும் ஆசிரியர்கள் அலுவலர்கள் ஈடுபட்டனர்

தமிழ்நாடு அரசு
கலம்பூர் தேர்வுநிலை பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்
ந.க.எண். 196/2025 மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 23.07.2025
[illegible]

| வ.எண் | வேலையின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | டெண்டர் வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | கலம்பூர் தேர்வுநிலை பேரூராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டடம் கட்டுதல் | 150.00 | 1,50,000/- |

[illegible]
தலைவர், கலம்பூர் தேர்வுநிலை பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.
செயல் அலுவலர், கலம்பூர் தேர்வுநிலை பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.

## உலகக்கோப்பை செஸ் தொடர்:
# 19 வயது இந்திய வீராங்கனை திவ்யா தேஷ்முக் சாம்பியன்
## பிரதமர் நரேந்திரமோடி வாழ்த்து



பதுமி, ஜூலை 29-
ஜார்ஜியாவில் நடந்த உலகக் கோப்பை செஸ் பைனலில், சக நாட்டு வீராங்கனையான ஹம்பியை வீழ்த்தி இந்திய வீராங்கனை திவ்யா தேஷ்முக் சாம்பியன் பட்டம் வென்றார். அவருக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**உலக கோப்பை செஸ்...**

ஜார்ஜியாவில் நடந்த பெண்களுக்கான உலக கோப்பை செஸ் தொடரில் 46 நாடுகளில் இருந்து 107 பேர் பங்கேற்றனர். நாக் அவுட் முறையில் நடந்த போட்டியில் சிறப்பாக செயல்பட்ட இந்திய வீராங்கனைகள், உலகத் தரவரிசையில் 18வது இடத்திலுள்ள, 19 வயது இந்திய வீராங்கனை திவ்யா மற்றும் 'நம்பர்-5' வீராங்கனை ஹம்பி, முதல் முறையாக பைனலுக்கு முன்னேறினர். அதுமட்டுமில்லாமல், உலக சாம்பியன்ஷிப் தகுதிப் போட்டியில் ('கேண்டிடேட்ஸ்' செஸ், 2026) பங்கேற்கும் வாய்ப்பையும் பெற்றனர். இருவரும் மோதிய முதல் இரண்டு போட்டிகள் டிராவில் முடிந்தன. டை பிரேக்கர் போட்டி இன்று நடந்தது. இதில் போட்டியில், ஹம்பியை வீழ்த்தி திவ்யா தேஷ்முக் சாம்பியன் பட்டம் வென்றார். உலகக் கோப்பை செஸ் தொடரில் இரண்டு இந்திய செஸ் வீராங்கனைகள் மோதிக்கொண்டது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

**பிரதமர் மோடி வாழ்த்து...**

இந்த நிலையில், இருவருக்கும் வாழ்த்து தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்ட பதிவில், "இரண்டு சிறந்த இந்திய செஸ் வீராங்கனைகள் வரலாற்றுச் சிறப்புமிக்க இறுதிப் போட்டியில் பங்கேற்று இருக்கின்றனர். 2025 ஆம் ஆண்டுக்கான மகளிர் செஸ் உலகக் கோப்பை சாம்பியன் பட்டத்தை இளம் வீராங்கனையான திவ்யா தேஷ்முக் வென்றிருப்பதை நினைத்து பெருமைப்படுகிறேன். இந்த குறிப்பிடத்தக்க சாதனைக்காக வாழ்த்துகள். இது பல இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கும். கோனெரு ஹம்பி இந்த தொடர் முழுவதும் தனது அபாரமான திறமையை வெளிப்படுத்தினார். இரு வீராங்கனைகளின் எதிர்கால லட்சியத்துக்காக வாழ்த்துகள்" எனப் பதிவிட்டுள்ளார்.

## ரிஷப் பண்ட்க்கு பதிலாக
# இந்திய அணியில் தமிழக வீரர் சேர்ப்பு

மான் செஸ்டர், ஜூலை 29-
காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ள ரிஷப் பண்ட்க்கு பதிலாக தமிழக வீரர் இந்திய அணியில் சேர்க்கப் பட்டுள்ளார்.

**டிராவில்...**

மான் செஸ்டரில் உள்ள ஓல்ட் டிரா போர்ட் மைதானத்தில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதிய 4-வது டெஸ்ட் போட்டி டிராவில் முடிந்தது. இப்போட்டியில் கிறிஸ்வோக்ஸ் வீசிய யார்க்கர் பந்தில் ரிஷப் பண்ட் காயம் அடைந்தார். அவரது வலது கால் பெருவிரலில் பந்து தாக்கியது. ரத்தம் கசிந்தது. காலில் வீக்கமானது. உடனடியாக அணியின் உடல் இயக்க நிபுணர் வந்து முதலுதவி அளித்தார்.

**பண்ட் அசைசகம்...**

ஆனாலும் வலி குறையாததால் ஆம்புலன்ஸ் பெயரிடப்பட்ட கோல்ப் வண்டி மூலம் மைதானத்தில் இருந்து வெளியே அழைத்து செல்லப்பட்டார்.அவருக்கு ஸ்கேன் எடுக்கப்பட்டது. அப்போது அவருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது தெரியவந்தது. காலில் எலும்பு முறிவு ஏற்பட்ட நிலையிலும் இந்திய அணிக்காக மீண்டும் வந்து விளையாடிய பண்ட் அரைசதம் அடித்து அசத்தினார்.

**ஜெகதீசன்...**

இந்நிலையில், காலில் ஏற்பட்ட எலும்பு முறிவால் இங்கிலாந்துக்கு எதிரான 5வது டெஸ்ட் போட்டியில் இருந்து ரிஷப் பண்ட் விலகியுள்ளார் அவருக்கு பதிலாக தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜெகதீசன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# 5-வது டெஸ்ட் போட்டியில் பும்ரா விளையாடுவாரா..?
## கேப்டன் சுப்மன் கில் பதில்

மான்செஸ்டர், ஜூலை 29-
இங்கிலாந்துக்கு எதிரான 5-வது டெஸ்ட்டில் வேகப் பந்துவீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா விளையாடுவாரா என்பது குறித்து கேப்டன் சுப்மன் கில் பேசியுள்ளார்.

**ஐந்தாவது போட்டி...**

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இரு அணிகளுக்கும் இடையில் இதுவரை 4 போட்டிகள் நிறைவடைந்துள்ளன. ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி வருகிற ஜூலை 31 முதல் ஓவலில் தொடங்குகிறது.

**வெல்லும் முனைப்பில்...**

5 போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. தொடரை வெல்லும் முனைப்பில் இங்கிலாந்து அணியும், சமன் செய்யும் முனைப்பில் இந்திய அணியும் ஐந்தாவது டெஸ்ட்டில் களமிறங்குகின்றன.

**பும்ரா விளையாடுவாரா...?**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை சமன் செய்ய கடைசி டெஸ்ட்டில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இந்திய அணி உள்ளது. இந்த தொடர் தொடங்கும் முன்பே ஜஸ்பிரித் பும்ரா 3 போட்டிகளில் மட்டுமே விளையாடுவார் எனக் கூறப்பட்டிருந்தது. இருப்பினும், கடைசி டெஸ்ட்டில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இந்திய அணி இருப்பதால், கடைசி டெஸ்ட் போட்டிக்கான பிளேயிங் லெவனில் ஜஸ்பிரித் பும்ரா சேர்க்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

**சிறப்பான விஷயமாக...**

கடைசி டெஸ்ட்டில் பும்ரா விளையாடுவது குறித்து சுப்மன் கில் பேசியதாவது: ஜஸ்பிரித் பும்ரா முழு உடல் தகுதியுடன் இருப்பதாக உணர்ந்து கடைசி டெஸ்ட்டில் விளையாட தயாராக இருந்தால், அது இந்திய அணிக்கு மிகவும் சிறப்பான விஷயமாக இருக்கும் என நினைக்கிறேன். கடைசி டெஸ்ட்டில் அவர் விளையாடாவிட்டாலும், எங்களிடம் சரியான பந்துவீச்சு தெரிவுகள் இருக்கின்றன என்றார். இரண்டாவது டெஸ்ட் போட்டியை தவிர்த்து மற்ற போட்டிகள் அனைத்திலும் ஜஸ்பிரித் பும்ரா விளையாடியது குறிப்பிடத்தக்கது.

# மாமல்லபுரத்தில் 4-வது சர்வதேச அலை சறுக்கு போட்டி
## 20 நாடுகளை சேர்ந்த வீரர்கள் பயிற்சி

மாமல்லபுரம், ஜூலை 29-
மாமல்லபுரத்தில் நடைபெற இருக்கும் 4-வது ஆசிய அலை சறுக்கு சாம்பியன்ஷிப்-2025 போட்டிக்கான முதற்கட்ட பயிற்சி நேற்று தொடங்கியது.

**மாமல்லபுரத்தில்...**

ஏசியன் சர்பிங் அசோசியேஷன் சார்பில் ஆகஸ்ட் மாதம் 3-ந்தேதி முதல் 12-ந்தேதி வரை மாமல்லபுரத்தில் நடைபெற இருக்கும் 4-வது ஆசிய அலை சறுக்கு சாம்பியன்ஷிப்-2025 போட்டிக்கான முதற்கட்ட பயிற்சி நேற்று காலை மாமல்லபுரம் கடற்கரை கோவில் வடபகுதியில் தொடங்கியது.

**20 நாட்டு வீரர்கள்...**

இதில் இந்தியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், சீனா, இந்தோனேஷியா, ஜப்பான், கொரியா, குவைத், லெபனான், மலேசியா, மாலத்தீவுகள், மியான்மர், பிலிப்பைன்ஸ், சவுதி அரேபியா, சிங்கப்பூர், இலங்கை, சீன தைபே, தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், உஸ்பெகிஸ்தான் ஆகிய 20 நாடுகளை சேர்ந்த சர்பிங் வீரர்கள் 50-க்கும் மேற்பட்டோர் நேற்று காலையில் இருந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**ஆசிய போட்டிக்கு தகுதி...**

இந்த ஆண்டு நடைபெறும் இந்த சாம்பியன்ஷிப் போட்டியில் 20 ஆசிய நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் ஷார்ட்போர்டு பிரிவுகளில் போட்டியிடுவார்கள். வெற்றி பெறுபவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் மற்றும் தாமிரம் பதக்கங்கள் வழங்கப்படும். மேலும் இந்த தொடரில் கலந்து கொள்ளும் வீரர்கள் வருகிற 2026-ம் ஆண்டு நடைபெற உள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான தகுதி இடங்களுக்கும் போட்டியிடுவார்கள். இந்திய அணியில் உள்ள 12 வீரர்களில் 8 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மரம் மனிதனின் உரம்

## அடுத்து வரும் 20 ஆண்டுகளும் காங்கிரஸ் எதிர்க்கட்சியாகவே இருக்கும்: அமித்ஷா

புதுடில்லி, ஜூலை 29-
அடுத்த 20 ஆண்டுகள் காங்கிரஸ் எதிர்க்கட்சியாகதான் இருக்கும் என்று மக்களவையில் உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் ஆபரேஷன் சிந்தூர் மற்றும் பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதம் நடைபெற்றது. மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் விளக்கத்தை தொடர்ந்து, அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் பேசி வருகின்றனர். அப்போது, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், அவரது சீனப் பயணம் குறித்து பேசினார். "படை பின்வாங்கல், வர்த்தக கட்டுப்பாடுகள், பயங்கரவாதம் குறித்து பேசுவதற்காகதான் சென்றேன். ரகசிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட செல்லவில்லை" எனத் தெரிவித்தார்.

இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் முழக்கமிட்டனர். இந்த நிலையில், உள்துறை அமைச்சர் அமித் ஷா குறுக்கிட்டு பேசியதாவது, "எதிர்க்கட்சியினருக்கு வெளியுறவுத் துறை அமைச்சர் மீது நம்பிக்கை இல்லை. ஆனால், வேறு சில நாடுகள் மீது நம்பிக்கை இருப்பது என் பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளது. அவர்களின் கட்சியில் அந்நியர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், அவர்கள் கட்சியின் அனைத்து விஷயங்களையும் இந்த அவையிலும் திணிக்கக் கூடாது.

அதனால் தான் அவர்கள் எதிர்க்கட்சி பகுதியிலேயே அமரந்திருக்கிறார்கள். அடுத்த 20 ஆண்டுகளுக்கு அங்கேயே தான் அமர்ந்திருப்பார்கள்" எனத் தெரிவித்தார்.

# ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகளுக்கு தடை நீட்டிப்பு

ஒகேனக்கல், ஜூலை 29-
நீர்வரத்து அதிகரிப்பால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி ஆற்றில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

கர்நாடகத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை முன்கூட்டியே தொடங்கிவிட்டது. இதனால் தொடர் கன மழை வெளுத்து வாங்கி வருகிறது. இதன்காரணமாக மாநிலத்தில் உள்ள அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. மேலும் கேரளாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்து வருகிறது. இதில் கிருஷ்ணராஜசாகர், கபினி அணையும் ஏற்கனவே நிரம்பிவிட்டது. இதனால் இந்த இரு அணைகளில் இருந்தும் தமிழகத்துக்கு காவிரியில் திறந்துவிடப்படும் நீரின் அளவானது அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நேற்று முன்தினம் மாலை நீர்வரத்து 98 ஆயிரம் கனஅடியாக வந்தது. தற்போது நேற்று காலை 6 மணி நிலவரப்படி நீர்வரத்து 1 லட்சத்து 5 ஆயிரம் கன அடியாக உயர்ந்துள்ளது.

இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து செல்கிறது. மெயின் அருவிக்கு செல்லும் நடைபாதை க்கு மேல் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. நீர்வரத்து அதிகரிப்பால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி மெயின் அருவி, ஆற்றில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் மாவட்ட ஆட்சியர் தடை விதித்துள்ளார்.

## இங்கிலாந்தில் ஜடேஜா புதிய சாதனை

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதிய 4-வது டெஸ்ட் போட்டி மான் செஸ்டரில் உள்ள ஓல்ட் டிராபோர்ட் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலில் ஆடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 358 ரன்கள் எடுத்து ஆல் அவுட் ஆனது. இதை தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 669 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. 311 ரன்கள் பின் தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்சில் விளையாடிய இந்திய அணி இறுதியில் 4 விக்கெட்டுக்கு 425 ரன்கள் குவித்தது. ஜடேஜா 107 ரன்னும், வாஷிங்டன் சுந்தர் 101 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதையடுத்து போட்டி டிராவில் முடிந்தது. ஆனாலும் தொடரில் 2-1 என இங்கிலாந்து முன்னிலை வகிக்கிறது.

இப்போட்டியில் 2 ஆவது இன்னிங்சில் சதம் அடித்து அசத்திய ஜடேஜா 4 விக்கெட்டுகளும் வீழ்த்தினார். இதன் மூலம் இங்கிலாந்தில் நடந்த டெஸ்ட் போட்டிகளில் 1000+ ரன்கள் மற்றும் 30+ விக்கெட்டுகள் எடுத்த ஒரே இந்திய வீரர் என்ற சாதனையை ஜடேஜா படைத்துள்ளார்.

## இந்தியா-பாக். போட்டி குறித்து கங்குலி

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் செப்டம்பர் 9 தொடங்கி செப்டம்பர் 28 வரை நடைபெறும் என ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவர் மோசின் நக்வி அறிவித்துள்ளார். ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் குரூப் ஏ-வில் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்தியா- பாகிஸ்தான் போட்டி செப்டம்பர் 14ல் நடைபெறுகிறது. குரூப் பி-ல் வங்கதேசம், இலங்கை, ஆப்கானிஸ்தான், ஹாங்காங் அணிகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில், ஆசிய கோப்பை தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் ஒரே குரூப்பில் இருப்பது குறித்த கேள்விக்கு பதில் அளித்த முன்னாள் கிரிக்கெட் வீரர் கங்குலி, "பஹல்காம் போன்ற பயங்கரவாதம் நடக்கக் கூடாது. அவை நிறுத்தப்பட வேண்டும். பயங்கரவாதத்திற்கு எதிராக இந்தியா வலுவான நிலைப்பாட்டை எடுத்தது. ஆனால் விளையாட்டு விளையாடப்பட வேண்டும்" என்று தெரிவித்தார்.

## நாட்டுக்காக இதைச் செய்வோம்: ரிஷப்




சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகளைக் கொண்ட ஆண்டர்சன் - டெண்டுல்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நான்கு போட்டிகள் முடிவில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையேயான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஜூலை 31-ம் தேதி லண்டனில் உள்ள கென்னிங்டன் ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இந்த தொடரை 2-2 என சமன் செய்ய வெற்றி பெற வேண்டும் என்று சக வீரர்களுக்கு ரிஷப் பந்த் ஆலோசனை வழங்கியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:- தனிப்பட்ட இலக்கைப் பற்றி சிந்திப்பதற்குப் பதிலாக, எங்கள் அணியை எப்படி வெற்றிபெறச் செய்ய அல்லது அணியை முன்னோக்கி நகர்த்த என்ன தேவைப்பட்டாலும் அதை செய்ய நான் தயாராக இருக்கிறேன். என் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் நான் எவ்வளவு பெருமைப்படுகிறேன் என்ற உணர்ச்சியை விளக்குவது மிகவும் கடினம். என் அணிக்கு நான் சொல்லப்போகும் ஒரே செய்தி, வெற்றி பெறுவோம் நண்பர்களே. நாட்டுக்காக இதைச் செய்வோம். என்று கூறியுள்ளார்.



தமிழக முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் ராமநாதபுரம் சமஸ்தானம் இளைய மன்னர் ராஜா நாகேந்திர சேதுபதி, அ.தி.மு.க.வில் இணைந்தார். அருகில் மாவட்ட செயலாளர் முனுசாமி உள்ளார்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் ஆடிபூர தேரோட்டம் கோலாகலம்
## அமைச்சர்கள் வடம் பிடித்து இழுத்து துவக்கி வைத்தனர்



ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூலை 29-
ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் ஆடிப்பூரத் தன்று தேர் திருவிழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது. தேரோட்டத்தை அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மாவட்ட கலெக்டர் சுகபுத்திரா ஆகியோர் தேரை வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தை துவக்கி வைத்தனர்.

பக்தர்கள் குவிந்ததால் கோதை நகர் குலுங்கியது. ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் ஆடிப்பூர தேர் திருவிழா தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவிலேயே சிறப்பு வாய்ந்த திருவிழாவாகும். இந்த ஆண்டு ஆடித் தேர் திருவிழா கடந்த 20-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி பல்வேறு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது. தேர் திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் நேற்று (28 ந் தேதி) வெகு விமரிசையாக நடைபெற்றது. அதிகாலை 4:30 மணிக்கு ஆண்டாள் ரங்கமன்னாருக்கு சிறப்பு மஞ்சனம் அலங்காரங்கள் செய்யப்பட்டு திருத்தேரில் எழுந்தருளினர். அப்பொழுது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர்.

இதனை தொடர்ந்து காலை 9:05 மணிக்கு திருத்தேரோட்டம் வெகு சிறப்பாக தொடங்கியது. தேரோட்டத்தை அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மாவட்ட கலெக்டர் சுகபுத்திரா, சென்னை செய்தி மக்கள் தொடர்பு துறை கூடுதல் இயக்குனர் பாஸ்கர், ராம்கோ நிறுவனங்களின் இயக்குனர் என் கே ஸ்ரீகண்டன் ராஜா, மாவட்ட எஸ்பி கண்ணன், எம். எல் . ஏக்கள். சீனிவாசன், தங்க பாண்டியன், கோவில் செயல் அலுவலர் சர்க்கரை அம்மாள் ஆகியோர் தேரை வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தை துவக்கி வைத்தனர்.

காலை 9:05 மணிக்கு நிலையில் இருந்து புறப்பட்ட தேர் நான்கு ரத வீதிகளை கடந்து மதியம் 1 மணிக்கு நிலையம் அடைந்தது. தேரோட்டத் திருவிழாவை முன்னிட்டு பல்வேறு அமைப்புகள் சார்பில் அன்னதானம் நீர் மோர் வழங்கப்பட்டது. பக்தர்களின் வசதிக்காக மருத்துவ வசதி போக்குவரத்து வசதி பாதுகாப்பு வசதிகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தது. 2000க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். தேர் நிலையம் அடைந்ததும் கோவில் நிர்வாகம் சார்பாக தேரை இழுத்து நிலையம் சேர்த்த பக்தர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். தேரோட்டத் திருவிழா ஏற்பாடுகளை அறங்காவலர் குழு தலைவர் பி ஆர் வெங்கட்ராமராஜா மற்றும் அறங்காவலர்கள் கோவில் செயல் அலுவலர் செள. சர்க்கரை அம்மாள் அறநிலையத்துறை அதிகாரிகள் கோவில் அலுவலர்கள் பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# பாகிஸ்தானின் மொழியில் பேசாதீர்கள்: அமைச்சர் கிரண் ரிஜிஜூ வேண்டுகோள்

புதுடில்லி, ஜூலை 29-
பாகிஸ்தானின் மொழியில் பேசாதீர்கள் என எதிர்க்கட்சி எம்.பி.,க்களுக்கு அமைச்சர் கிரண் ரிஜிஜூ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்று, பார்லிமென்ட்டில் பஹல்காம் தாக்குதல் மற்றும் 'ஆபரேஷன் சிந்துார்' தொடர்பான சிறப்பு விவாதம் நேற்று நடைபெற்றது. இது தொடர்பாக, பார்லிமென்ட் விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ கூறியதாவது: இந்தியாவின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் எதையும் செய்ய வேண்டாம், பாகிஸ்தானின் மொழியில் பேச வேண்டாம். நாம் கவனமாக இருக்க வேண்டும். இந்திய பாதுகாப்பு படைகளின் கண்ணியத்தை நாம் பராமரிக்க வேண்டும்.

காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தேசிய நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு அறிக்கைகளையும் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும். அவர்கள் இந்தியாவுக்கு எதிராகப் பேசுவதை தவிர்க்க வேண்டும். இந்திய மக்களின் விருப்பத்தின் பேரில்தான் பிரதமர் இந்திய ராணுவத்தின் மூலம் ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடங்க முடிவு செய்தார். பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக ஆப்பரேஷன் சிந்தூர் குறித்த விவாதம் லோக்சபாவில் நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

# பீகாரில் வெளியிடப்படவுள்ள வரைவு வாக்காளர் பட்டியல்
## தேர்தல் கமிஷன் விளக்கம்

புதுடெல்லி, ஜூலை 29-
பீகாரில் வெளியிடப்பட்ட உள்ள வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

பீகாரில் சட்டசபை தேர்தல் வருவதையொட்டி, அங்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி நடந்து வருகிறது. 2003-ம் ஆண்டுக்கு பிறகு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டவர்கள், தங்கள் குடியுரிமையை நிரூபிக்க தேவையான ஆவணங்களை அளிக்க வேண்டும் என்று தேர்தல் கமிஷன் கூறியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.திருத்தப்பணியின் முதல்கட்டம் முடிந்திலையில், தேர்தல் கமிஷன் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட உள்ளது. அந்த பட்டியலின்தான், இறுதி பட்டியலாக இருக்கும் என்று தகவல் வெளியாகி வருகிறது.

இந்நிலையில், அதற்கு தேர்தல் கமிஷன் மறுப்பு தெரிவித்துள்ளது. தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-வீடு, வீடாக சென்று கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி அலுவலர்கள் அளித்துள்ளனர்.7 கோடியே 24 லட்சம் வாக்காளர்கள், கணக்கீட்டு படிவங்களை நிரப்பி சமர்ப்பித்துள்ளனர். 36 லட்சம் பேர், நிரந்தரமாக இடம்பெயர்ந்துள்ளனர் அல்லது எங்கு உள்ளனர் என்று தெரியவில்லை. 7 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் உள்ளன. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

அதுதான் இறுதி பட்டியல் என்ற மாயையை சிலர் உருவாக்க பார்க்கிறார்கள். ஆனால் அது இறுதியானது அல்ல.பட்டியலில் தவறுதலாக பெயர் சேர்க்கப்பட்டவர்கள், தவறுதலாக பெயர் நீக்கப்பட்டவர்கள் ஆகியோர் குறித்து கட்சிக்காரர்கள் தற்காக ஆகஸ்டு 1-ந் தேதியில் இருந்து செப்டம்பர் 1-ந் தேதி வரை காலம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. பிறகு ஏன் பிரச்சினை செய்கிறார்கள் என்று தெரியவில்லை.அரசியல் கட்சிகள் அந்த ஒரு மாத காலத்தில், தங்களது முகவர்கள் மூலமாக கோரிக்கை மற்றும் ஆட்சேபனை தெரிவிக்க சொல்லலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சினிமா CINI செய்திகள்

## ‘ஜென்ம நட்சத்திரம்’ படத்தின் நன்றி அறிவிப்பு




தமன் கதாநாயகனாக நடித்து கடந்த ஜூலை 18 அன்று திரையரங்குகளில் வெளியான படம் ஜென்ம நட்சத்திரம். ரோமியோ பிக்சர்ஸ் ராகுல் வெளியிட்ட இந்தப் படத்தை அமோகம் ஸ்டுடியோஸ் மற்றும் வொயிட் லேம்ப் பிக்சர்ஸ் கே. சுபாஷினி ஆகியோர் தயாரித்திருந்தனர். மணிவர்மன் இயக்கி இருந்த படம் ரசிகர்கள் மத்தியில் பாசிடிவ்வான ரெஸ்பான்ஸ் இருந்ததையடுத்து படத்திற்கான திரைகளின் எண்ணிக்கையும் அதிகமாகியுள்ளது.

இதன் நன்றி தெரிவிக்கும் விழா சமீபத்தில் நடைபெற்றது.

படத்தின் வெற்றி குறித்து நாயகன் தமன் பேசுகையில், தமிழ்நாட்டில் 150 திரையரங்குகளில் தான் முதலில் படம் திரையிட்டோம். மக்கள் கொடுத்த ஆதரவிற்கு பிறகு 200 - 250 என்ற எண்ணிக்கை அதிகரித்து. ரசிகர்கள் மற்றும் மீடியா கொடுத்த ஆதரவிற்கு நன்றி. என்றார். இயக்குநர் மணிவர்மன் பேசுகையில், இந்தப் படம் மல்டிஃபிளக்ஸ் திரையரங்கை விட சிங்கிள் ஸ்கிரீனில் படம் நன்றாக போய்க் கொண்டிருக்கிறது. நேரில் ஆடியன்ஸ் ரியாக்ஷன் பார்க்கும்போது மகிழ்ச்சியாக உள்ளது என்றார்..

## சஞ்சு அம்ப்ரோஸ் இயக்கும் ‘தி கிளப்’




நடன இயக்குனர் சஞ்சு அம்ப்ரோஸ் இநக்கும் தி கிளப் என்ற படத்தை *Fox movies* சார்பில் மது தயாரிக்கிறார். இப் படத்தில் புதுமுகம் சஜன் நாயகனாக நடிக்க நாயகியாக மீனாட்சி நடிக்கிறார். தமிழ் மலையாளத்தில் உருவாகவுள்ள இப்படத்தின் படப்பிடிப்பு ஆகஸ்ட் 20 அன்று கேரளா ஆலப்புழாவில் தொடங்கி, பெங்களூர், மைசூர் மற்றும் கோயம்புத்தூரில் நடைபெற உள்ளது. படம் பற்றி இயக்குனர் சஞ்சு அம்ப்ரோஸ் கூறுகையில், ஒரு பெண் நடன கலைஞரிடம் ஒரு புத்தகம் கிடைக்கிறது, அதில் ஒரு கிராமத்தில் காதலிக்க மறுத்த பெண்ணை ஒருவன் கொலை செய்கிறான் என்று எழுதப்பட்டுள்ளது.

அதன் உண்மை தன்மையை அறிய அந்த கிராமத்திற்கு அந்த நடனக் கலைஞர் செல்கிறார். அங்கு சென்று ஆராயும் போது அப்பெண் ஒரு பெரிய பிரச்சனையில் சிக்கிக் கொண்டிருப்பது தெரிய வருகிறது. அந்தப் பெண்ணை அவள் காப்பாற்றினாலா இல்லையா என்பதை சொல்லும் கதை தான் தி கிளப் என்றார். இப்படத்திற்கு ஒளிப்பதிவு முரளி, இசை ராஜீவ் ரவி, கலை பின்டோஜாய்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 1-க்கு உட்பட்ட மாட்டுத்தாவணியிலிருந்து சர்வேயர் காலனிக்கு செல்லும் சாலையில் புதிதாக அமைக்கப்ட்டுள்ள பாதாள சாக்கடை திட்டப்பணிகள் குறித்து சோதனை ஒட்டம் அமைச்சர் மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். உடன் மேயர் இந்திராணி, ஆணையாளர் சித்ரா, மாநகராட்சி அலுவலர்கள் பலர் உள்ளனர்.


## ‘மகா அவதார் நரசிம்மா’ திரைவிமர்சனம்



பிரகலாதனின் கதையும், அவனது பக்தியால் பரவசமடைந்த விஷ்ணு, நரசிம்மர் அவதாரம் எடுத்து அசுரன் இரன்யகசுபுவை அழித்ததும் தான் ’மகா அவதார் நரசிம்மா படம். பழைய கதை என்றாலும், அதை இன்றைய தலைமுறையினர் தெரிந்துக்கொள்ளும் வகையில் அனிமேஷன் திரைப்படமாக கொடுத்திருக்கிறார்கள்.

புராண கதைகள் சிறுவர்களுக்கு எளிதில் புரியும்படியும், ரசிக்கும்படியும் அனிமேஷன் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. கிளைமாக்ஸில் நரசிம்ம அவதாரமும், அவர் அசுரனை அழிக்கும் காட்சியும் மெய்சிலிர்க்க வைக்கிறது. வசன உச்சரிப்பு, இசை, காட்சியமைப்பு என அனைத்தையும் சரியாக கையாண்டுள்ள மகா அவதார் நரசிம்மா படம் சிறந்த திரையரங்க அனுபவத்தை கொடுக்கும்.

## ‘தலைவன் தலைவி’ திரைவிமர்சனம்



விஜய் சேதுபதி - நித்யா மேனன் திருமணமாகி சில மாதங்களில் பிரிந்து விடுகிறார்கள். மூன்று மாதங்களாக பிரிந்திருக்கும் இவர்கள் மீண்டும் ஒன்று சேர வாய்ப்பு இருந்தும் ஒன்று சேர்ந்தார்களா? இல்லையா? என்பதை குடும்பங்களில் அன்றாட நடக்கும் பிரச்சனைகளின் பின்னணியில், சொல்லியிருக்கும் படமே தலைவன் தலைவி.

ஆகாச வீரன் என்ற கதாபாத்திரத்தில் அன்பான கணவராகவும், அம்மா மீது அக்கறையுள்ள பிள்ளையாகவும் வரும் விஜய் சேதுபதி, நடிப்பில் அசத்தியுள்ளார்.

நித்யா மேனன் நடிப்பில் ஸ்கோர் செய்திருந்தாலும், அவரது திறமையை முழுமையாக வெளிப்படுத்தக்கூடிய அளவுக்கு படத்தில் காட்சிகள் இல்லை, யோகி பாபு, வரும் காட்சிகள் அனைத்தும் சிரிப்பு மழை. சரவணன் - தீபா சங்கர், செம்பன் வினோத் - ஜானகி சுரேஷ் ஆர்.கே.சுரேஷ், காளி வெங்கட் உள்ளிட்ட பலரும் கதாபாத்திரத்திற்கு பலம் சேர்த்திருக்கிறார்கள். சந்தோஷ் நாராயணின் இசையில் பாடல்கள் அருமை. எழுதி இயக்கியிருக்கும் பாண்டிராஜ், வழக்கமான குடும்ப சிக்கல்களை குட்டி அறிவுறையோடு, நகைச்சுவையாக சொல்லியிருந்தாலும், அதை அழுத்தமாக சொல்லாதது படத்திற்கு சற்று பலவீனமே.

## ‘ஹரி ஹர வீரமல்லு’ விமர்சனம்



உள்ளவர்களிடம் எடுத்து இல்லாதவர்களுக்கு கொடுக்கும் வீரன் பவன் கல்யாண், கோஹினூர் வைரத்தை திருடுவதற்காக டெல்லிக்கு போகிறார். அவரது பயணம் வெற்றி பெற்றதா? இல்லையா ? என்பதை அவுரங்கசீப்பின் கதையோடு, கற்பனை கலந்து சொல்லியிருக்கும் படமே ஹரி ஹர வீரமல்லு. முகலாய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் இந்துக்களை காப்பாற்ற வீரன் ஒருவன் உருவெடுத்தான் என்ற கற்பனை காட்சிகளுடனுடன் உருவாகி இருக்கிறார் இயக்குநர் ஏ.எம்.ஜோதி கிருஷ்ணா. வீரமல்லு என்ற வீரனாக நடித்திருக்கும் பவன் கல்யாண் படம் முழுவதும் மாஸாக வலம் வருகிறார்.

நாயகி நிதி அகர்வாலுக்கு பெரிதாக வேலை எதும் கொடுக்கபடவில்லை. முகலாய மன்னர் அவுரங்கசீப்பாக நடித்திருக்கும் பாபி தியோல் நடிப்பில் மிரட்டியிருக்கிறார். சத்யராஜ், நாசர், நர்கிஸ் ஃபக்ரி, நோரா ஃபடேஹி, உள்ளிட்ட பலரும் கதாபாத்திரங்களுக்கு பொருத்தமான தேர்வு. கீரவாணியின் இசை படத்திற்கு ஓவர்டோஸ். எழுதி இயக்கியிருக்கும் ஏ.எம்.ஜோதி கிருஷ்ணா வரலாற்று கதையோடு தனது கற்பனை கதையையும் சேர்த்து, பிரமாண்டமான கொடுத்திருக்கிறார். இந்து இஸ்லாமிய சகோதரரகள் ஒற்றுமையாக வாழும் நாட்டில் பிளவையும் மூர்க்கத்தையும் உருவாக்கும் இது போன்ற கதைகளை தவிர்த்து அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்ற நோக்கில் படத்தை கொடுத்திருந்தால் படம் வெற்றி பெற்று இருக்கும்.

## ‘மாரீசன்’ திரைவிர்சனம்



பகத் பாசில் வடிவேல் இருவரும் ஒன்றாக பயணிக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

அப்போது வடிவேலுவிடம் பணம் இருப்பதை தெரிந்துக் கொள்ளும் பகத் பாசில், அந்த பணத்தை பறிக்க அவருடன் தொடர்ந்து பயணிக்கிறார். ஆனால், பகத் பாசிலுடன் பயணித்தாலும், அவருக்கே தெரியாமல், சிலரை தேடிப் பிடித்து வடிவேலு கொலை செய்கிறார். வடிவேலு யார்?, அவர் செய்யும் கொலைகளுக்கும், பகத் பாசிலுக்கும் என்ன தொடர்பு என்பதே படத்தின் மீதிக் கதை. கதையின் நாயகர்களாக நடித்திருக்கும் வடிவேலு மற்றும் பகத் பாசில் இருவரது எதார்த்தமான நடிப்பு மற்றும் நகைச்சுவை படத்தை சுவாரஸ்யமாக நகர்த்திச் செல்கிறது.

ஞாபக மறதி நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் வடிவேலுவும், நல்லவன் போல் நடித்து பணம் பறிக்கும் முயற்சியில் ஈடுபடும் பகத் பாசிலும் போட்டி போட்டு நடித்திருக்கிறார்கள். கோவை சரளா, சித்தாரா, விவேக் பிரசன்னா, ரேனுகா, லிவிங்ஸ்டன், பி.எல்.தேனப்பன், கிருஷ்ணா, ஹரிதா ஆகியோர் அளவாக நடித்து படத்துக்கு பலம் சேர்த்திருக்கிறார்கள். யுவன் சங்கர் ராஜா இசையில் பாடல்கள் சுமார் ரகமே. கிரைம் சஸ்பென்ஸ் ஜானராக கதை உருவெடுத்தாலும், படம் முழுவதும் உணர்வுப் பூர்வமான படைப்பாக கொடுத்திருக்கிறார் இயக்குனர் வி.கிருஷ்ணமூர்த்தி. மொத்தத்தில், ‘மாரீசன்’ மக்கள் மனம் கவரும்.

## நத்தம் மாரியம்மன் கோவிலில் ஆடிப்பூர விழா



**நத்தம், ஜூலை 29-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மாரியம்மன் கோவிலில் ஆடிப்பூர விழா நடந்தது. இதையொட்டி அம்மனுக்கு வளையல்களால் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு வளையல்களும், அன்னக் கூழும் பிரசாதமாக வழங்கபட்டது. இதைப்போலவே கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் உள்ள செண்பக வல்லி அம்மன், மீனாட்சிபுரம், காளியம்மன், அசோக்நகர் பகவதி அம்மன், காமராஜர்நகர் பத்ரகாளியம்மன், தில்லை காளியம்மன், ராஜகாளியம்மன், குட்டூர் உண்ணாமலை அம்பாள் கோவில்களிலும் ஆடிப்பூரத்தை முன்னிட்டு அம்மன்களுக்கு வளையல்காப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு சிறப்பு அபிஷேகங்கள் நடந்தது.

## மதுரை மண் சார்ந்த திரைப்படம் ‘மதுரை 16’ படத்தின் ப்ரமோஷன் விழா கோலாகலம்




**மதுரை, ஜூலை 29-**

மதுரை 16 திரைப்படத்தின் ப்ரோமோஷன் விழா மதுரை விஷால் தி மாலில் சிறப்பாக மதுரை மக்கள் முன்னிலையில் ஆடல் பாடலுடன் கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்துனர்களாக டாக்டர் சரவணன் மற்றும் டாக்டர் திவாகர் மற்றும் டைகர் சக்ரவர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் மதுரை 16 திரைப்படத்தின் தயாரிப்பாளர்கள் ஸ்ரீதேவி சின்னயாஜீன் வில்லியம்ஸ், இயக்குனர் ஜான் தாமஸ், கதாநாயகன் ஜெரோம் விஜய், கதாநாயகி நிவேதா தினேஷ் மற்றும் பட குழுவினர்கள் பலர் பங்குபெற்றர்.

மேலும் இந்த நிகழ்ச்சியை மதுரை அடங்கா அஜித் குருப்ஸ் தல சபி தொகுத்து வழங்கினார். மேலும் இந்த விழாவில் கலந்து கொண்டவர்கள் மதுரை 16 திரைப்பட கலைஞர்களை வாழ்த்தினர். முற்றிலும் புது முகங்கள் நடிப்பில் உண்மை சம்பவத்தின் அடிப்படையில் ஒரு அரசியல் கிரைம் திரில்லர் படமாக இந்த திரைப்படம் 200-க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் செப்டம்பர் முதல் வாரத்தில் திரைக்கு வர உள்ளது.

## ராமநாதபுரம் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**ராமநாதபுரம், ஜூலை 29-**

கடைக்கோடி மக்களின் குறைகளையும் தீர்க்கும் வகையில் முதல்வரின் சிறப்பு திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினால் ராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகாரிகளிடம் அளிக்கும் கோரிக்கை நிறைவேறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் குறைகளை நேரடியாக கேட்டறியும் வகையில் பணிகள் துவங்கப்படும் என முதலமைச்சர் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார்கள். அதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நுகர்புற மற்றும் ஊரகப்புற மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்டமானது நடத்தப்படும் என அறிவித்திருந்தார்கள். இதன்படி கடந்த 15-ந் தேதி கடலூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை முதல்வரால் தொடங்கி வைத்ததை தொடர்ந்து ராமநாதபுரம் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டது. கடைக்கோடி மக்களுக்கும் அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின்; சேவைகள், திட்டங்கள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். அதன்படி ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 4 நகராட்சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்கள், 7 பேரூராட்சிகளில் இத்திட்டத்தின் கீழ் சிறப்பு முகாமானது நடைபெற்று வருகின்றது. முகாம்கள் நடைபெறும் பகுதிகள் தொடர்பான அட்டவணை தெரிவிக்கப்பட்டு அதன்படி நடைபெற்று வருகின்ற முகாம்களில் பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை மனுக்களாக வழங்கி வருகின்றார்கள். நகர்ப்புறப் பகுதிகளில் 15 அரசு துறைகளில் சார்பில் 46 சேவைகளும் ஊரகப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளின் சார்பில் 43 சேவைகளும் வழங்கப்படும். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களில் தீர்வு காணும் வகையில் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று கோரிக்கை மனு வழங்கிய பயனாளி மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத்சிங் காலோனிடம் தெரிவித்ததாவது:- என்னுடைய பெயர் தேவகி. நான் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம் பள்ளப்பச்சேரி கிராமத்தில வசித்து வருகின்றேன். நான் விவசாய வேலை செய்து வருகின்றேன். எனக்கு அரசு வழங்கும் திட்டங்களை பெற வேண்டும் என நீண்ட நாட்களாக எண்ணி வந்தேன். எனக்கு எழுத படிக்கத்தெரியாது. எனக்கு உதவி செய்வதற்கு யாரும் இல்லாததால் நான் அரசு அலுவலகங்களை நாடி செல்ல முடியாமல் தவித்து வந்தேன். இந்த நேரத்தில் தான் எங்களது கிராமத்திற்கு வீடு வீடாக வந்து விண்ணப்பங்களை தன்னார்வலர்கள் வழங்கி வருவதை அறிந்து அவர்களிடம் விசாரித்தேன். அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் கோரிக்கைகளை நேரடியாக கேட்டறியும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை துவக்கி வைத்து அதன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களின்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார்கள். எனவே தங்களுடைய கோரிக்கைகளை தங்கள் பகுதியில் நடைபெறும் முகாமில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு விண்ணப்பத்தினை வழங்கி பயன்பெறுங்கள் என தன்னார்வலர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். மேலும் எங்கள் பகுதியில் எந்த இடத்தில் முகாம் நடைபெறும் என்பது பற்றியும் நான் கொண்டு செல்ல வேண்டிய ஆவணங்கள் தொடர்பாகவும் எனக்கு விளக்கமாக எடுத்துரைத்தார்கள். நான் தற்போது இங்கு நடைபெறும் முகாமில் தையல் இயந்திரம் வேண்டி மனு அளித்துள்ளேன்.

மனுவினை பெற்றுக் கொண்ட அலுவலர்கள் என் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்கள். இதன் மூலம் எனக்கு நம்பிக்கை பிறந்துள்ளது. கடைக்கோடி மக்களுக்கும் அரசின் நலத்திட்டங்கள் கிடைத்திடும் வகையில் இத்திட்டத்தை கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

## திருமங்கலம் ரயில் நிலையத்தில் குடிநீர் இயந்திரங்கள் அமைப்பு: பயணிகள் மகிழ்ச்சி




**திருமங்கலம், ஜூலை 29-**

தினபூமி நாளிதழில் செய்தி வெளியானதை தொடர்ந்து திருமங்கலம் நகர் ரயில் நிலைய பிளாட்பாரங்களில் பயணிகளின் வசதிக்கென குடிநீர் வழங்கிடும் இயந்திரங்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தின் இரண்டாவது மிகப்பெரிய ரயில் நிலையமாக திருமங்கலம் ரயில் நிலையம் திகழ்கிறது. இங்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான பயணிகள் தங்களது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். திருமங்கலம் ரயில் நிலையத்தில் நடைபெற்று வந்த சீரமைப்பு பணிகள் பெரும்பாலும் முடிந்துவிட்ட நிலையில் பயணிகளுக்கான குடிநீர் வசதிகள் இன்னும் செய்து தரப்படவில்லை. இதனிடையே ரயிலில் பயணம் மேற்கொள்பவர்களுக்கும், ரயிலில் பயணம் செய்ய வந்திருப்பவர்களுக்கும் தேவையான குடிநீர் வசதியினை செய்து கொடுத்திடும் வகையில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்களுக்கு இணைப்பு கொடுக்கப்படாததால் பயணிகள் தாகத்தால் தவித்து வருகின்றனர்.

குறிப்பாக முதலாவது பிளாட்பாரத்தில் குடிநீர் வழங்கிடும் இடத்தில் தூய குடிநீர் வழங்கிடும் இயந்திரம் இல்லாத காரணத்தினாலும், இரண்டாவது பிளாட்பாரத்திலிருந்த சிற்றுண்டி ஸ்டால் மூடப்பட்டு விட்டதாலும் பயணிகள் தாகத்தால் தவித்திடும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே திருமங்கலம் ரயில் நிலையத்தில் பயணிகளின் நலன் கருதி முதலாவது பிளாட்பாரத்தில் தூய குடிநீர் வழங்கிடும் இயந்திரம் அமைத்திட வேண்டும் என தின பூமி நாளிதழில் செய்தி வெளியானது.

இதையடுத்து அதிரடியாக களமிறங்கிய மதுரை கோட்ட ரயில்வே நிர்வாகம் ரயில் நிலையத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது பிளாட்பாரங்களில் பயணிகளின் தாகம் தீர்த்திடும் வகையில் குடிநீர் வழங்கிடும் இயந்திரங்களை புதிதாக நிறுவி உள்ளது. இதன் மூலம் திருமங்கலம் ரயில் நிலையத்தில் பயணிகளுக்கு 24 மணி நேரமும் குடிநீர் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதால் பயணிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.






சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் சார்பில் உயர்கல்வி உரையாடல்கள் என்னும் கலந்துரையாடல் தொடரின் முதல் நிகழ்வாக "வருங்கால கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் மீது செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தும் தாக்கம்" குறித்த கருத்தரங்கினை உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித்துறை செயலாளர் பொ.சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக்கல்வி ஆணையர் ஜெ.இன்னசென்ட் திவ்யா, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற துணைத்தலைவர் எம்.பி.விஜயகுமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இந்தியா வரலாற்று சாதனை...(1-ம் பக்க தொடர்ச்சி)

இதனை பெரிதுப்படுத்தி கூறி வருகிறார். ஆனால், இந்திய பிரதமரோ முற்றிலும் அமைதி காத்து வருகிறார் என்றார். வெளிநாட்டுக்கு செல்வதற்கும், சொந்த நாட்டில் ஜனநாயக அமைப்புகள் நிலைத்தன்மையை இழப்பதற்கும் நேரம் தேடி கொண்டிருக்கிறார் என எக்ஸ் வலைதளத்திலும் அதுபற்றி பதிவிட்டு உள்ளார். ஆனால், ட்ரம்பிடம் கடந்த மாதம் 35 நிமிடங்கள் பேசிய பிரதமர் மோடி அப்போது, இந்தியா மத்தியஸ்தம் செய்யும்படி கோரவில்லை. ஒருபோதும் அதனை ஏற்று கொள்ளாது என்று தெளிவாக கூறிவிட்டார்.பாகிஸ்தானின் வேண்டுகோளுக்கு ஏற்பவே, ராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான இரு நாடுகளுக்கு இடையேயான விவாதங்கள் நடந்தன என்றும் கூறினார்.

## மத்திய அரசு தயாராக

இந்நிலையில், பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் ஆபரேசன் சிந்தூர் பற்றி விரிவாக விவாதம் நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு, மக்களவையில் நேற்று மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் விளக்கமளித்து பேசினார். அவர் கூறும்போது, விவாதத்திற்கு முழு ஒத்துழைப்பு தர மத்திய அரசு தயாராக உள்ளது என கூறினார். தொடர்ந்து அவர், நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த தைரியம் நிறைந்த வீரர்களுக்கு என்னுடைய அஞ்சலியை செலுத்தி கொள்கிறேன்.

## மகளிரின் சிந்தூர்....

பயங்கரவாதத்திற்கு எதிரான உறுதியான நடவடிக்கையாக ஆபரேசன் சிந்தூர் அமைந்தது. இந்தியாவின் நவீன ஏவுகணைகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்தினோம். இந்திய மகளிரின் சிந்தூர் அழிக்கப்பட்டதற்கு பதிலடியாகவே தாக்குதல் நடத்தப்பட்டது. பாகிஸ்தானில் தீவிரவாத இடங்களை மட்டுமே நாங்கள் இலக்காக கொண்டு தாக்குதல் நடத்தினோம். பாகிஸ்தான் தாக்குதலால் இந்தியாவுக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை.

## அடிபணியவில்லை...

இந்திய வீரர்களின் வீரத்திற்குகும், திறமைக்கும் நான் தலைவணங்குகிறேன். அப்போது, இந்திய படைகளுக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டது. பயங்கரவாத செயல்களை இந்தியா பொறுத்து கொள்ளாது என ஆபரேசன் சிந்தூர் வாயிலாக தெளிவுப்படுத்தப்பட்டது. ஆனால், கொல்லப்பட்ட பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் அரசு மரியாதை செலுத்தியது. நமது இலக்கு 100 சதவீதம் எட்டப்பட்டு விட்டது.

ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கையின்போது, எந்த அழுத்தத்திற்கும் நாம் அடிபணியவில்லை. அது ஒரு தற்காப்பு நடவடிக்கை. முப்படைகளின் அசாத்திய ஒருங்கிணைப்புக்கு இது ஒரு சிறந்த உதாரணம் என அவர் பேசியுள்ளார்.


## எந்த சேதமும் இல்லை

இந்தியா அமைதியை விரும்புகிறது. இந்திய படைகளின் பலத்தை சர்வதேச நாடுகள் புரிந்துகொண்டன. ஆபரேஷன் சிந்தூர் மூலம் இந்தியா வரலாற்று சாதனை நிகழ்த்தியுள்ளது. ஆபரேஷன் சிந்தூரின் நோக்கம் நிறைவேறியது. பாகிஸ்தான் முதலில் போர் நிறுத்தம் செய்யக் கோரியது. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் இந்தியாவுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை. இந்தியாவின் எந்த ஒரு பகுதியையும் பாகிஸ்தானால் தாக்க முடியவில்லை என்று பேசினார். மேலும் அவர்," நோக்கம் நிறைவேறியதால்தான் ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

டிரம்ப் கூறியதால் இல்லை. ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதே தவிர நிறைவு பெறவில்லை. தேவைப்பட்டால் ஆபரேஷன் சந்தூர் தொடரும்.



திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் ஆடிபூரத்தன்று தேர் திருவிழா நேற்று வெகு விமர்சியாக நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று தேரை வடம்பிடித்து இழுத்தனர். (உள்படம் - சிறப்பு அலங்காரத்தில் ஆண்டாள், ரெங்கமன்னார்).



சென்னையில் நேற்று தமிழக முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமியை சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவரும், முன்னாள் அமைச்சரும், மாநில அம்மா பேரவை செயலாளரும், மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளருமான ஆர்.பி.உதயகுமார் தனது பிறந்த நாளை முன்னிட்டு நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார்.

# சிவகங்கை மாவட்டத்தில் 2 நாட்கள் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம்

சிவகங்கை, ஜூலை 29-

சிவகங்கை மாவட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்றும், நாளையும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்கிறார்.

தமிழகம் முழுவதும் மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணத்தை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடங்கினார்.

சட்டசபை தொகுதி வாரியாக "மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்" என்ற பெயரில் அவர் சுற்றுப் பயணம் செய்து வருகிறார்.

அதன்படி இன்றும் (செவ்வாய்க்கிழமை), நாளையும் (புதன்கிழமை) சிவகங்கை மாவட்டத்தில் சூறாவளி சுற்றுப்பயணம் செய்கிறார். சட்டமன்ற தொகுதிக்கு ஒரு இடம் என்ற வகையில் அவர் பிரசாரம் செய்கிறார்.

அதன்படி காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை ஆகிய 4 இடங்களில் அவர் பேசுகிறார்.

அவரது சுற்றுப்பயண விவரம் வருமாறு:-

இன்று மாலை 4.30 மணி அளவில் காரைக்குடி எம்.ஜி.ஆர். சிலை அருகில் எடப்பாடி பழனிசாமி பேசுகிறார். பின்னர் மாலை 5.30 மணி அளவில் திருப்பத்தூர் அண்ணா சிலை அருகேயும், இரவு 7:45 மணி அளவில் சிவகங்கை அரண்மனை வாசலிலும் மக்களை சந்தித்து பேசுகிறார்.

அன்று இரவு எடப்பாடி பழனிசாமி சிவகங்கையில் தங்குகிறார்.

பின்னர் நாளை (புதன்கிழமை) காலை 10 மணி அளவில் சிவகங்கை சன் ராக்ஸ் மகாலில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் மஞ்சுவிரட்டு பந்தயம், வடமாடு நலச் சங்கம், விவசாய சங்கம், விளையாட்டு வீரர்கள், தென்னை நார் உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகளுடன் அவர் கலந்துரையாடுகிறார்.

மாலை 4.30 மணி அளவில் மானாமதுரை தேவர் சிலை அருகே அவர் மக்களை சந்தித்து பேசுகிறார்.

தொடர்ந்து ராமநாதபுரம் மாவட்டத்திற்கு அவர் செல்கிறார். சிவகங்கை மாவட்டத்திற்கு எடப்பாடி பழனிசாமி வருகையை முன்னிட்டு அதிமுக தொண்டர்கள், நிர்வாகிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேலும் எடப்பாடி பழனிசாமியை வரவேற்கும் விதமாக மயிலாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், காளியாட்டம் போன்ற கலை நிகழ்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# ஆபரேஷன் சிந்தூர்: எதிர்க்கட்சிகள் அமளியால் மக்களவை ஒத்திவைப்பு

டெல்லி, ஜூலை 29-

ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதம் தொடங்கியதுமே எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை ஒத்திவைக்கப் பட்டது.



காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை குறிவைத்து மே 7ம் தேதி இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது. இதையடுத்து, இந்தியா, பாகிஸ்தான் இடையே மோதல் வெடித்தது. இரு தரப்பும் ஏவுகணை, டிரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தின. 3 நாட்கள் நடந்த மோதல் இரு தரப்பு ராணுவ மட்டத்திலான பேச்சு வார்த்தை மூலம் முடிவுக்கு வந்தது.

இதனிடையே, நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் கடந்த 21ம் தேதி தொடங்கியது. கூட்டத்தொடர் தொடங்கியதுமுதல் பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி ஆகிய விவகாரங்களை விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இரு அவைகளிலும் அமளியில் ஈடுபட்டனர். இதனால், கடந்த வாரம் முழுவதும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் முடங்கின.

இந்நிலையில், பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் குறித்து மக்களவையில் நேற்று மதியம் 12 மணிக்கு விவாதம் தொடங்கியது. இந்த விவாதத்தில் மத்திய மந்திரிகள் ராஜ்நாத் சிங், அமித்ஷா, ஜெய்சங்கர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பேச உள்ளனர். ஆனால், ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதம் தொடங்கியதுமே பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி குறித்து விவாதிக்க வேண்டுமென வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் மக்களவை மதியம் 1 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.




மதுரை மாநகருக்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து நேற்று மாநகர் மேற்கு 6-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் விளாங்குடி கே.ஆர்.சித்தன் தலைமையில் விளாங்குடி மந்தையில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், கு.திரவியம், பேராசியர் உசிலை ஜெயபால், வக்கீல் தமிழ்செல்வன், வி.பி.ஆர்.செல்வகுமார், கவுன்சிலர் நாகஜோதிசித்தன், பி.என்.சுந்தர்ராஜன், கேசவன், கறிக்கடை மலைச்சாமி, விஜயகுமார், நாராயணன், ஜஸ்டிஸ்ராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.